In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசிந்திய விச்வ ஸாதாக்யாகமம்

(புண்யவிதி, புண்ய நிர்ணயவதி படலம்)

மற்றும் இவ்விரு படலங்களின் தமிழாக்கமான

சிவ புண்ணியத் தெளிவு

நிகமஞான தேசிகர் இயற்றியது

வெளியீடு:

ஸ்ரீமத் நம்பியாண்டார் நம்பி ஆச்ரமம்

திருமலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अचिन्त्यविश्वसादाख्यागमः

(पुण्यविधिपुण्यनिर्णयविधिपटलौ)

மற்றும் இவ்விருபடலங்களின் தமிழாக்கமான

சிவபுண்ணியத்தெளிவு

நிகமஞானதேசிகர் இயற்றியது

பதிப்பாசிரியர்

தி. கணேசன்

சைவசித்தாந்த முதுநிலை ஆராய்ச்சியாளர்
பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

வெளியீடு

ஸ்ரீமத் நம்பியாண்டார் நம்பி ஆச்ரமம்
திருமலை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ACINTYAVIŚVASĀDĀKHYĀGAMA

(Puṇyavidhi & Puṇyanirṇayavidhi chapters)

and their Tamil adaptation

CIVAPUṆṆIYATTELIVU

of

Nigamajñānadeśika

Edition with introduction

Dr. T. GANESAN
Senior Researcher in Śaivasiddhānta
French Institute
Pondicherry

Srimath Nambiyandar Nambi Ashramam
Thirumalai.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விளக்கக் குறிப்பு

நூல் பெயர்	:	அசிந்தியவிச்வசாதாக்யாகமம், சிவப்புண்ணியத்தெளிவு
பதிப்பாசிரியர்	:	தி. கணேசன்
மொழி	:	ஸம்ஸ்க்ருதம், தமிழ்
பொருள்	:	சிவபுண்ணியம்
பதிப்பு ஆண்டு	:	2009
பிரதிகள்	:	500
தாள்	:	Dy. 8 kg. மேப்லித்தோ
நூல் அளவு	:	Dy. 1/8
எழுத்து	:	12
பக்கங்கள்	:	68
கணினி வடிவமைப்பு & அச்சிட்டோர்	:	ஸ்ரீதுர்கா இந்திய ஆய்வியல் நிறுவனம், நயினாரகரம்.
வெளியீடு	:	ஸ்ரீமத் நம்பியாண்டார் நம்பி ஆச்ரமம் திருமலை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ குருப்யோ நம:

திருமணவிழா மலர்

தம்பதிகள்

சிரஞ்சீவி **க. கார்த்திகேய சிவம்**

ஸௌபாக்யவதீ **உ. ஆர்த்தி**

நாள்

ஸ்ரீ விரோதி வருஷம், ஆனிமாதம் 25ம் நாள்

09.07.2009 வியாழக்கிழமை

இடம்

M.A.V.M.M. திருமண மண்டபம்

திருப்பரங்குன்றம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூல்

மதுரை, திருநகர்

சிவஸ்ரீ ரா. கங்காதர பட்டர் ஸ்ரீமதீ கௌரீ

தம்பதிகளின் புதல்வன்

சிரஞ்சீவி க. கார்த்திகேய சிவம்

மதுரை

சிவஸ்ரீ ஷ. உக்ரபாண்டிய பட்டர் ஸ்ரீமதீ மதுரவாணீ

தம்பதிகளின் புதல்வி

ஸௌபாக்யவதீ உ. ஆர்த்தீ

ஆகியோரது

திருமணவிழா நன்னாளில்

சிங்கப்பூர்

ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தின்

மேலாண்மைக்குழு உறுப்பினரும், தருமசீலருமான

உயர்திரு ஆர். செல்வக்குமார் அவர்கள் வழங்கிய நிதியுதவி கொண்டு

வெளியிடப்படுகிறது

ஸ்ரீ விரோதி வருஷம் ஆனி மாதம் 25ம் நாள்

வியாழக்கிழமை

09.07.09

M.A.V.M.M திருமண மண்டபம்

திருப்பரங்குன்றம்

மதுரை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

சைவாகமம் கூறும் பதி, பசு, பாசமெனும் முப்பொருள்களுள் அநாதிமலமுத்தனும், உலகங்கள் மற்றும் ஜீவராசிகள் யாவற்றுக்கும் பதியாகி ஒப்பற்ற ஒரே தலைவனுமான சிவபெருமானின் திருவடிக்கீழ் அடங்கியிருத்தலாகிய முக்திநிலையை அடைவதற்குச் சிவபெருமானால் அருளப்பட்ட ஆகமங்களே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு திறப்பட்ட நெறிகளை உபதேசிக்கின்றன. ஆணவம், கருமம், மாயை என்னும் மும்மலங்களால் கட்டுண்ட ஆன்மாக்கள் அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்றவாறு சிவபெருமானின் திருவருட்டுணை கொண்டு மேற்கூறிய நால்வகை நெறிகளுள் யாதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ கைக்கொண்டு, அதன்படி ஒழுகி, மலங்களினின்றும் நீக்கம் அடைந்து இறுதியில் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்து அழியாத சிவாநந்தானுபவம் பெறுவார்கள்

சரியை நெறியில் முக்கிய பங்கு வகிப்பவை சிவபுண்ணியங்கள் எனப்படுவன. பொதுவாக நமது பாரதநாட்டின் ஆன்மிகநெறிக்கு அடிப்படையாகத் திகழ்வன புண்ணியங்கள். வேதம், ஸ்மிருதி மற்றும் அவற்றைச் சார்ந்த புராணங்களுள் இப்புண்ணியங்கள் பலவாறாகவும், விரிவாகவும் எடுத்துரைக்கப்படுகின்றன. மனம், மெய், மொழிகளாகிய மூவகைக் கரணங்களைக் கொண்டு மனிதனால் மற்ற ஜீவராசிகளுக்குச் செய்யப்படும் உதவிகளே புண்ணியத்தின் அடிப்படை. பாவங்கள் இதற்கு நேர் எதிர்மறையானவை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

परोपकारः पुण्याय पापाय परपीडनम्

என்று மிக எளிமையாக வியாசமுனிவர் மஹாபாரதத்தில் கூறுகிறார். எனினும், வேதங்கள் விதிக்கும் அக்னிஷ்டோமம், அசுவமேதம் முதலான யாகங்களையும், புராணங்கள் விதிக்கும் சாந்திராயணம் முதலான விரதங்களையும் செய்பவர்கள் இறுதியில் அப்புண்ணியங்களின் பயனாகிய சுவர்க்கம் முதலான உலகங்களை அடைந்து அங்குள்ள இன்பங்களைத் துய்த்து, புண்ணியங்களின் தொகுதி தீர்ந்தவுடன் மீண்டும் பூவுலகில்தான் பிறக்கவேண்டும். பிறப்பிறப்பற்ற முக்திநிலையை அப்புண்ணியங்களால் மனிதன் அடைய இயலாது. எனவே, சிவபெருமான் அருளிச் செய்த ஆகமங்களே நிலையானதும் என்றும் அழிவில்லாததுமான சிவானந்தப் பேற்றை அனுபவிக்கும் முக்தியை அளிக்கவல்லன.

முக்தியானது சாலோகம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுஜ்ஜியம் என நால்வகையாக ஆகமங்களிலும், மற்ற சைவசித்தாந்தநூல்களிலும் கூறப்படுகின்றன. சிவபுண்ணியங்கள் சாலோகமுக்தியை அளிக்கவல்லன என்று சிவபுண்ணியத் தெளிவில் ஆசிரியர் கூறுகிறார். இந்நூலின் ஆசிரியர் மறைஞானசம்பந்தரின் சீடரான நிகமஞானதேசிகர் என்று உறுதியாகக் கூறலாம். ஏனெனில் நூல் தொடக்கத்தில் காப்புச் செய்யுட்களில் திருஞானசம்பந்தர், காரைக்காலம்மையார் முதலான நாயன்மார்களுக்கும், சந்தானாசாரியார்களுக்கும், பின்னர் தன் ஆசிரியரான குகைமறைஞானதேசிகருக்கும் வணக்கம் செலுத்துகிறார். இது போன்ற அமைப்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறைஞான சம்பந்தரின் ஏனைய தமிழ்நூல்களிலும் காணப்படுகிறது. மேலும், ஆகமநூல்களைக் கற்று அவற்றின் உட்பொருளைக் கண்டறிந்த ஆகமபண்டிதன் என்று சிவதருமோத்தரநூல் தொடக்கத்தில் மறைஞானசம்பந்தர் தன்னைப் பற்றிக் கூறுகிறார். அதே கருத்தை சிவபுண்ணியத்தெளிவின் காப்புச் செய்யுளில் காண்கிறோம். அடுத்ததாக, நூலின் சொல்லாட்சியும் நிகமஞானதேசிகரின் மற்ற நூல்களிலுள்ளதைப் போன்றே பெரும்பாலும் அமைந்துள்ளதும் நோக்கத்தக்கது. நிகமஞானதேசிகர் தன்னுடைய மிகப் பெரிய ஆகமத்தொகுப்பு நூலான தீக்ஷாதர்சம் என்னும் நிபந்தநூலில் அசிந்த்யவிச்வஸாதாக்ய ஆகமத்தையே பெரும்பான்மையும் பயன்படுத்தியிருக்கிறார். அதிலிருந்து ஏராளமான மேற்கோள் சுலோகங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே, அவ்வாகமத்தின் இரண்டு முக்கியமான படலங்களை அவர் மொழிபெயர்த்திருப்பது மிக்க பொருத்தமுடையதே.

- அசிந்தியவிசுவசாதாக்கியம்

அசிந்த்யவிச்வஸாதாக்யம் என்பது சிந்தியாகமத்தின் உபாகமாகக் கொள்ளப்பட்டுள்ளது; இவ்வாகமத்தின் சில கையெழுத்துப் பிரதிகள் புதுச்சேரி French Institute நிறுவனத்தில் உள்ளன. இந்த ஆகமம் இதுவரை அச்சாகவில்லை. பல உரையாசிரியர்களாலும் பத்ததி ஆசிரியர்களாலும் குறிப்பாக நிகமஞானதேசிகரால் இந்நூல் பிரமாணமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

இது சுமார் 6000 சுலோகங்களைக் கொண்டது. 72 படலங்களுடையது. நாற்பாதங்களாகப் பிரிக்கப்படவில்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாயினும், நாற்பாதச் செய்திகளும் இங்கு காணப்படுகின்றன. ஆசார்யலக்ஷணம், அநாசார்யலக்ஷணம், சிஷ்யலக்ஷணம் முதலியனவும், நித்யானுஷ்டானங்களான ஸந்தியோபாஸனம், ஸூர்யபூஜை, அக்னிகாரியம், சிவபூஜை முதலியனவும் இங்கு விளக்கப்படுகின்றன. அடுத்து, பல வகையான தீக்ஷைகளைப் பற்றிய செய்திகளையும் இந்நூலில் நாம் காணலாம். கிரியாஸமயதீக்ஷை, கர்மதீக்ஷை, கர்மநிர்வாணதீக்ஷை, த்ரிதத்வகர்மதீக்ஷை, யோகதீக்ஷை, அதற்குத் தகுதியானவன், அஷ்டாங்கயோகம், ஷடாதாரம், நவாதாரம், யோகத்தின் அங்கமான ஸமாதி, நிராதாரயோகம், ஜ்ஞானதீக்ஷை, விஜ்ஞானதீக்ஷை, ஷடத்வா, ஸாதகாபிஷேகம், அஸ்த்ராபிஷேகம், அம்ருதாபிஷேகம் ஆகியன இதில் அடங்கும். ஆலயப் பிரதிஷ்டைகளில் விக்னேச்வரபிரதிஷ்டை, கௌரீபிரதிஷ்டை, விஷ்ணுபிரதிஷ்டை, நந்திகேச்வர பிரதிஷ்டை முதலியனவும், ஆகமச்சுவடிகளைப் பிரதிஷ்டை செய்து வழிபடுவதற்காக வித்யாபீடபிரதிஷ்டை, நித்யோத்ஸவம், சிவராத்திரிபூஜை, சிவபக்தபிரதிஷ்டை, பவித்ராரோபணம், த்வஜாரோஹணம், ஜீர்ணோத்தாரம், மடபிரதிஷ்டை, கூபபிரதிஷ்டை, புஷ்கரிணீபிரதிஷ்டை ஆகியனவும் இங்கு காணப்படுகின்றன. அந்தியேஷ்டி, சைவசிராத்தம், புண்ணியவிதி, புண்ணியநிர்ணயவிதி ஆகியன இங்கு கூறப்படும் சர்யாபாதச் செய்திகளுட் சில.

புண்ணியவிதி மற்றும் புண்ணியநிர்ணயவிதி ஆகிய இரு படலங்களும் சிவபுண்ணியங்களை மிக விரித்துக் கூறுகின்றன. சிவாலயத்தில் ஆற்றக் கூடிய பல்வேறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தொண்டுகள், சீடன் தன்னுடைய ஆசாரியனுக்குச் செய்யும் தொண்டுகள், சிவயோகிகள், சிவபக்தர்கள் முதலியோர்க்குச் செய்யும் பல்வகைத் தொண்டுகள் முதலியனவும், அவற்றால் அடையும் பயன்களையும் விளக்கிக் கூறுகின்றன. சரியை நெறியைப் பின்பற்றி ஒழுகுவோர்க்கும், சிவபக்தி மற்றும் சிவத்தொண்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வோர்க்கும் மிக இன்றியமையாத கருத்துக்களை இவ்விரு படலங்களும் விளக்குகின்றன. மேலும், சமூகத்தில் அனைத்து மக்களிடையேயும் சிவப்பணி செய்வதன் பயனையும், அதன் வாயிலாக சிவபக்தி என்னும் பயிர் தழைப்பதற்கும் இவ்விரு படலங்களும் உதவுகின்றன.

சிவதர்மம் எனும் ஒப்பற்ற மிகப் பழமையான நூலிலும் இதே கருத்துக்கள் மிக விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன.[1] இம்மாதிரியான சிவத்தொண்டுகளின் மூலம் தான் பாமரமக்களிடையேயும் சிவபக்தி பரவ இயலும். மேலும், இந்நூல்களில் கூறப்படும் சிவத்தொண்டுகளை ஏழை, செல்வந்தர் எனப் பாகுபாடின்றி எல்லோரும் எளிதில் மிகப் பொருட்செலவின்றி செய்யலாம். சிவபக்தியும், சிரத்தையும் தான் இச்செயல்களுக்கு மூலதனம்.

---

1 அப்பயதீக்ஷிதர் தாமியற்றிய சிவதியானபத்ததியென்னும் நூலில் சிவதர்மங்களைக் கண்காணிப்பவராக நந்தியெம்பெருமானைப் போற்றுகிறார்.

दक्षिणद्वारपार्श्वस्थं संस्मरेन्नन्दिकेश्वरम् ।

अनेकरुद्रप्रमथभूतसङ्घैर्निषेवितम् ।

शिवधर्ममहाध्यक्षं शिवान्तःपुरपालकम् ।

சிவதர்மநூலும் நந்தியெம்பெருமான் சிவதர்மங்களை ஸநத்குமாரமுனிவருக்குக் கூறுவதாக அமைந்துள்ளதும் இங்கு நோக்கத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோழர் காலத்திற்குப் பின் மீண்டும் அக்கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நிகமஞானதேசிகர் அசிந்திய விசுவசாதாக்கியாகமத்தின் இவ்விரு படலங்களையும் அழகிய தமிழில் செய்யுளாக இயற்றி நம் போன்றோருக்காக அளித்துள்ளார்.

- அசிந்தியவிசுவசாதாக்கியாகமம்

அசிந்தியவிசுவசாதாக்கியாகமம் நான் முன்னரே கூறியபடி இதுநாள் வரை அச்சாகவேயில்லை. நான் பணிபுரியும் பாண்டிச்சேரி பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் (French Institute, Pondicherry) இவ்வாகமத்தின் மூன்று கையெழுத்துக் காகிதப் பிரதிகள் உள்ளன. அவற்றின் துணையோடுதான் மேற்கண்ட இருபடலங்களையும் நான் ஒருவாறு பதிப்பித்துள்ளேன். பல இடங்களில் சொற்களும் எழுத்துக்களும் சிதைந்தும், தவறாகவும் உள்ளன. எனது சிற்றறிவுக்கெட்டியவரை தவறுகளைத் திருத்தியுள்ளேன். சில இடங்களில் மூல ஆகமச் சொற்களைத் திருத்துவதற்கு சிவபுண்ணியத் தெளிவின் செய்யுட்கள் உதவியாயிருந்தன. சில செய்யுட்களுக்கு ஆகமத்தில் மூல சுலோகங்களே காணப்படவில்லை. ஓரிரு இடங்களில் ஆகமசுலோகங்களைத் திருத்த இயலவில்லை. அவற்றை அடிக்குறிப்பில் தெரிவித்துள்ளேன். பல இடங்களில் நிகமஞானதேசிகரின் மொழிபெயர்ப்பு அப்படியே மூலத்திற்கு நேராக அமைந்திருப்பது கண்டு இன்புறத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர், சிவபெருமான் திருவருளால் இன்னும் நல்லநிலையிலமைந்த சுவடிகளோ, கையெழுத்துப் பிரதிகளோ கிடைத்தால் திருத்திய பதிப்பாக வெளியிடலாம். இவ்வாகமத்தைத் திருந்திய முதற்பதிப்பாக வெளிக்கொணர தற்சமயம் முயற்சி செய்துவருகிறேன். ஈசனருளால் அடுத்த ஆண்டு முதற்பாகம் வெளிவரலாம். தீக்ஷைகளின் பலவகைகளையும் இவ்வாகமம் விளக்கிக்கூறுகின்றது. அதிலும் குறிப்பாக, யோகதீக்ஷை, யோகஜ்ஞானதீக்ஷை, விஜ்ஞானதீக்ஷை, த்ரிதத்வகர்மதீக்ஷை, ஏகதத்வதீக்ஷை முதலிய தீக்ஷைகளைச் செய்யும் முறையை அசிந்த்யவிச்வஸாதாக்யாகமத்தில் தான் காண்கிறோம்.[2]

- மறைஞானசம்பந்தரின் சைவ பரம்பரை

நிகமஞானதேசிகர் தமது தீக்ஷாதர்சமென்னும் அளவில் மிகப் பெரிய ஆகமத்தொகுப்பு நூலின் இறுதியில் தம்முடைய குருபரம்பரையைச் சற்று விளக்குகிறார். ஆமர்தகம், கோளகி, புஷ்பகிரி, ரணபத்ரம் என்னும் நான்கு சைவசந்தானங்கள் அகஸ்தியர், காச்யபர், பாரத்வாஜர் ஆகிய முனிவர்களால் தோற்றுவிக்கப்பட்டன. அவை கைலாயமலையின் அருகில் அமைந்தவை. அவற்றுள், புஷ்பகிரி சந்தானத்தில் ஸௌந்தராசாரியார் என்னும் மிகப் புகழ்வாய்ந்த சைவ ஆசாரியர் தோன்றி கிரமரத்னகமாலா என்னும் சைவபத்ததி நூலை இயற்றிப் புகழ்பெற்று விளங்கிவந்தார். அந்தப் பரம்பரையைச் சேர்ந்த வாமதேவர் என்னும் சைவ ஆசாரியர் புராணங்களில் ருத்திரகோடி எனப்

---

[2] ஸோமசம்புபத்ததிக்கும் மூலமாக அசிந்த்யவிச்வஸாதாக்யாகமும் அமைந்துள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்களில் சிலர் கூறுவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புகழப்படும் திருக்கழுக்குன்றமென்னும் சிவத்தலத்தில் தோன்றித் தில்லையில் வாழ்ந்துவந்தார். அவருடைய இளைய சகோதரர் நிகமஞானதேவர்; தமிழ் நூல்களில் அவர் தம்மை மறைஞானசம்பந்தர் எனக் கூறிக்கொள்கிறார். சமணர்களை விரட்டி வேதநெறி தழைப்பதற்காகத் திருவவதாரம் செய்த திருஞானசம்பந்தப் பெருமானின் திருப்பெயரைத் தாம் தாங்கியிருப்பதை மிகப் பெருமையுடன் கூறுகின்றார் மறைஞானசம்பந்தர். அவர் மூல ஆகமங்களை நன்கு கற்று சிவதருமோத்தரம் என்னும் ஒப்பற்ற சைவ நூலையும், இன்னும் பல சைவ நூல்களையும் தமிழில் செய்து பெரும் புகழ் அடைந்தார். மன்னரான ஸதாசிவராயரின் பெருமதிப்பைப் பெற்றிருந்ததால் மறைஞானசம்பந்தர் பல சிவாலயங்களுக்குக் கோபுரங்களைக் கட்டுவித்தார்; திருவண்ணாமலை, திருக்குடந்தை, திருவெண்காடு, விருத்தாசலம் முதலிய புகழ்பெற்ற சிவத்தலங்களில் சைவ ஆகமங்களை நிறுவினார். அவருடைய சீடரும் அவருடைய திருப்பெயரையே தாங்குபவருமான மறைஞானதேசிகர் (நிகமஞானதேசிகரென்று தம்முடைய வடமொழிநூல்களில் குறிக்கப்படுபவர்) ஆத்மார்த்தபூஜாபத்ததி, தீக்ஷாதர்சம் முதலிய மிகப் பெரிய ஆகமத்தொகுப்பு நூல்களை யாத்தவர்.

- மறைஞானசம்பந்தருடைய நூல்கள்

1. சைவசமயநெறி: இந்நூல் ஆசாரியாபிஷேகம் பெற்ற சைவ ஆசாரியர்கள் தினமும் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நித்தியகருமங்களை மிக விரிவாகவும் அடிப்படைச் செய்திகளை முறையாகவும் விளக்கு கிறது. தமிழ்நாட்டுச் சைவசித்தாந்த வரலாற்றிலேயே நித்தியகருமங்களை மிக விரிவாக விளக்கும் முதல் நூல் இதுதான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறைஞான சம்பந்தரின் மற்ற நூல்களைப் போன்று இதுவும் குறட்பாக்களால் ஆனது. கடவுள் வாழ்த்துப் பாடல்களில் திருஞானசம்பந்தப்பெருமான் முதலிய நால்வர்களுக்கும், காரைக்கால் அம்மையார், திருமாளிகைத் தேவர், முதலானோர்க்கும், சிவத்தொண்டு புரியும் சிவ பக்தர்களுக்கும், வணக்கம் தெரிவிப்பது நோக்கத்தக்கது. சைவ ஆசாரியர்களுள் இந்த முறையில் நாயன்மார்களுக்கும், ஹரதத்தர் முதலான பழமையான சைவ ஆசாரியார்களுக்கும் சந்தானாசாரியார்களுக்கும், தம் நூல்களில் வாழ்த்தி வணக்கம் தெரிவிப்பவர் இவர் ஒருவரே.

அடுத்து, சைவசமயநெறியில் ஆசாரிய இலக்கணம், சிஷ்ய இலக்கணம் ஆகியவையும், சௌசம், நீராடுதல், நித்தியகர்மா னுஷ்டானம், சிவபூஜை, ஆகியன விரிவாகவும், நுணுக்கமாவும் விளக்கிக் கூறப்படுகின்றன. தீக்ஷைகளின் வகைகள், அவற்றின் இலக்கணம், இலிங்கலக்ஷணம், உருத்திராக்க லக்ஷணம், மந்திரகளை ஜபம் செய்யும் முறை, சிவாலயத்திற்குச் சென்று வழிபாடாற்றும் முறை ஆகிய இன்ன பிற அரிய அடிப்படைச் செய்திகள் தெளிவாக விளக்கப்படுகின்றன. ஆசிரியர் இவ்வாறு அரிய செய்திகளைக் குறட்பாக்களில் அடக்கியிருப்பது மற்றொரு வியப்பான செய்தி. நித்தியானுஷ்டானம் செய்வோருக்கு இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டி (guide) என்றால் அது மிகையன்று. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் இதற்கு அரிய ஆகமநூற்செய்திகளைத் தன்னகத்தே கொண்ட மிக விரிவானதோர் உரை வகுத்திருப்பது சைவ உலகிற்குப் பெரும் தொண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. அடுத்து, உருத்திராக்கவிசிட்டம் என்னும் நூல்; கழுத்தில் அணியும் உருத்திராக்க மாலையில் நூற்றெட்டு மணிகள் இருப்பது போல் இந்நூலும் நூற்றெட்டுப் பாக்களால் ஆனது. உபபுராணமான ஸ்கந்தபுராணத்தையும், மற்ற சைவ ஆகமங்களையும் ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டது. உருத்திராக்கத்தின் உற்பத்தி, அதன் வகைகள், வண்ணங்கள், அவற்றை அணிவதால் தனித்தனியே விளையும் நன்மைகள், அணியும் முறை முதலான பல நுணுக்கமான செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறார்.

3. மஹாசிவராத்திரிகல்பம் என்னும் நூல் மஹாசிவராத்திரி தினத்தில் சிறப்பு வழிபாடு செய்யும் முறையையும், அதை ஒவ்வோராண்டும் ஒரு நோன்பாக நோற்கும் வழிமுறைகளையும் சுருக்கமாக எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்குகிறது.

4. ஒவ்வொரு மாதமும் அனுஷ்டிக்கவேண்டிய மாதசிவராத்திரி விரதத்தையும், அதற்கு அங்கமான சிவவழிபாட்டையும் தெள்ளென விளக்கும் மாதசிவராத்திரி கற்பம் என்னும் நூல் சில சிறப்பு அம்சங்களை உடையது; தற்காலத்தில் ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முந்தைய தினத்தில் மாசசிவராத்திரி பூஜையும் விரதமும் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஆனால், மறைஞானசம்பந்தர் ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு தினத்தில் மாதசிவராத்திரி பூஜையைச் செய்யவேண்டும் என்று விளக்குகிறார். இதற்கு ஆதாரமாக அவர் எந்த நூலையும் கூறாவிடினும் சந்திரஞானாகமம் என்னும் மூலாகமத்தில் அவர் கூறும் செய்திக்கு ஆதாரம் கிடைக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. ஸோமவாரசிவரத்திரிகற்பமெனும் சிறிய நூலில் திங்கட்கிழமையில் மஹாசிவராத்திரி நேர்ந்தால் அது மிகச் சிறந்தது என்றும், அன்று அனுஷ்டிக்கவேண்டிய விரதம், சிவபூஜை ஆகியவற்றையும் சுருங்கக் கூறுகின்றார் மறைஞானசம்பந்தர்.

6. ஸோமவாரகற்பமென்னும் 216 செய்யுட்களைக் கொண்ட நூலில், கார்த்திகை மாதத்து முதல் திங்கட்கிழமையிலிருந்து தொடங்கி வருடம் முழுதும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஆற்றவேண்டிய சிவவழிபாட்டைச் சற்று விரித்து, அவ்விரதத்தின் பெருமை, பயன் ஆகிய செய்திகளுடன் விளக்குகிறார் ஆசிரியர். ஸோமவாரவிரதம், மஹாசிவராத்திரி விரதம் ஆகியன காசி, தில்லை, காளத்தி முதலிய மிகப் பழமையான சைவத்தலங்களில் மேற்கொள்ளப்பட்டால் அவை மிக அதிகமான பயனைத் தரும் என்பது ஆசிரியர் கருத்து. சுயம்புலிங்கத்திற்குப் பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம், பழச்சாறுகள் ஆகியவற்றை முறையாகச் செய்து திருமுழுக்கு ஆற்றினால் விளையும் அளவிலாத பயன்களையும், திருக்கோயிலில் இலிங்கத்திருமேனிக்கு பொன்னாலான அணிகலன்களை வழங்குவதால் அடையும் நற்பயன்களையும், நறுமணம் பொருந்திய தூபம், மலர்கள் முதலியவற்றை சிவலிங்கத்திற்கு அர்ப்பணம் செய்வதால் விளையும் நன்மைகள் ஆகியவற்றையும், இன்ன பிற சிவத் தொண்டுகளையும் ஆசிரியர் விரித்துக் கூறுகிறார். இவ்வாறான மிக அரிய செய்திகளைக் கொண்ட ஒப்பற்ற பழமையான நூல் சிவதருமம்; அந்நூலின் அடிப்படையிலேயே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறைஞானசம்பந்தர் இச்செய்திகளை நமக்குத் தொகுத்துக் கூறுகிறார் எனத் தெளிவாகத் தெரிகிறது.[3] ஒருவன் இறக்கும் தறுவாயில் உறவினர்களையும், பிற உலக நினைவுகளையும் விடுத்து சிவபெருமானின் திருநாமத்தையோ, திருவடிகளையோ நினைந்திருந்தால் அவன் சிவப்பேறடைவது உறுதி என்று இந்நூலின் இறுதியில் மறைஞானசம்பந்தர் பறைசாற்றுகிறார். இவ்வாறான விரதங்களையும், அவற்றிற்கு அங்கமாகச் செய்ய வேண்டிய சிவபூஜைகளையும் தெள்ளென விளக்கும் நூல்களைத் தமிழ் மொழியில் முதன் முதலில் ஆக்கியவர் மறைஞானசம்பந்தர் ஒருவரே தான்.

அடுத்து, சிவதருமோத்தரம் என்னும் மிகப் பழமையான சைவநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு: 12 அத்தியாயங்களைக் கொண்டதும், சிவ பக்தியின் மாட்சிமையையும் சிவவழிபாட்டின் அளவிடற்கரிய பெருமைகளையும் சிவபுண்ணியங்களையும் அனைவரும் அறிந்துணரும் வண்ணம் எளிய நடையில் இயற்றப்பட்டதுமான இந்த சிவதருமோத்தரத்தை மிக அழகான நடையில் மறைஞானசம்பந்தர் தமிழாக்கம் செய்துள்ளார்; பல வித யாப்புகளில் நூலை அமைத்துள்ளார். அவருடைய சீரிய படைப்புகளில் தலையாயது இந்நூல்.

இவற்றைத் தவிர, கமலாலயச் சிறப்பு என்னும் பெயர் கொண்ட திருவாரூர்த்தலபுராணமும், அருணகிரி

---

[3] சிவபக்திச் செல்வத்தைத் தன்னகத்தே கொண்ட சிவதருமம் எனும் ஒப்பற்ற இந்நூலைச் சிவாலயங்களில் வக்காணிப்பதற்காகச் சோழ மன்னர்கள் 11, 12 நூற்றாண்டுகளில் பல நிவந்தங்களை ஏற்படுத்தியிருந்த செய்திகளைக் கல்வெட்டுக்கள் வாயிலாக நாம் அறிகிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புராணமென்னும் திருவண்ணா மலைத் தலபுராணமும் மறைஞானசம்பந்தரால் இயற்றப்பட்டவை. 13 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதும், நம்பி திருவிளையாடல் என்று போற்றப்படுவதுமான பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவிளை யாடற்புராணத்திற்குப் பின்னர் 16 ஆம் நூற்றாண்டில் மறைஞானசம்பந்தர் தான் வடமொழியிலிருந்து தமிழில் தலபுராணங்களை இயற்றியுள்ளார்; அவருக்குப் பின்னரே நிரம்ப அழகிய தேசிகர், சைவ எல்லப்ப நாவலர், தானகோனேரியப்பர், பரஞ்சோதிமுனிவர் போன்றோர்களால் மிகுதியான தலபுராண இலக்கியங்கள் பல தமிழில் தோன்றின.[4] பின்னர், 19 ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் புகழ்வாய்ந்த தமிழ்ப் புலவரும், தமிழ்த் தாத்தா என அன்புடன் அழைக்கப்படும் மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் போன்ற ஒப்பற்ற தமிழ்ப் புலவர்களை உருவாக்கியவருமான மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பல சிவத்தலங்களுக்கு அவ்வத்தலங்களின் வடமொழி ஸ்தலபுராணங்களின் கருத்துக்களை நன்கு அறிந்து தமிழில் தலபுராணங்களை இயற்றியுள்ளனர். அவற்றில் பெரும்பான்மை அச்சாகியுள்ளன.

இம்மஹான்கள் இயற்றிய நூல்கள் பெரும்பான்மை அச்சாகிவெளிவரவில்லை. நிகமஞானதேசிகரின் ஏனைய

---

[4] மறைஞானசம்பந்தர் மற்றும் அவருடைய சீடரான நிகமஞானதேசிகர் ஆகியோரின் அனைத்து நூல்களையும் பற்றி யாம் மேற்கொண்ட ஆங்கிலத்தில அமைந்த மிக விரிவான ஆராய்ச்சி நூலில் இவ்விரு சைவாசாரியர்களைப் பற்றி மிக விளக்கமாகத் தெரிந்துகொள்ளலாம். T. GANESAN, *Two śaiva teachers of the sixteenth century: Nigamajñāna I and his disciple Nigamajñāna II*, French Institute of Pondicherry, Pondicherry, 2008.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடமொழித் தொகுப்புநூல்களான ஆத்மார்த்தபூஜாபத்ததி, தீக்ஷாதர்சம், முதலியனவும், மேலும் வெளியிடப்படவேண்டிய பல சைவநூல்களும் நல்ல பதிப்பாக வெளிவருவதற்குச் சைவ அன்பர்கள் பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதவ வேண்டுகிறேன்.

சிவபுண்ணியத்தெளிவு முதன்முதலில் 1885 ஆம் ஆண்டு சென்னையிலிருந்தும், 1954 ஆம் ஆண்டு த.ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால் திருந்திய பதிப்பாக திருவாவடுதுறை ஆதீனத்தின் மூலம் வெளியிடப்பட்டது. பின்னர், 1966 ஆம் ஆண்டு பொன். சுப்பிரமணியபிள்ளை அவர்களின் பொழிப்புரையுடன் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமிதேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது. தற்சமயம் இந்நூலுக்கு மூலமான அசிந்தியவிசுவசாதாக்கியாகமத்தின் இருபடலங்களுடன் வெளியிடப்படுகிறது.

சிவபுண்ணியத்தெளிவில் கூறப்பட்டுள்ள சிவ புண்ணியங்களையும் அதிலும் குறிப்பாக சைவநூற் பதிப்புகளைத் தாமாக மேற்கொண்டும், அவற்றைச் செய்பவர்களுக்கு உதவிபுரிந்தும் சிவபக்திச் செல்வர்கள் சிவபுண்ணியச் சீலர்களாக விளங்கவேண்டும் என்று சிவபெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

சிவஞானத் தொண்டன்,

தி. கணேசன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசிந்தியவிசுவசாதாக்கியாகமம்

(புண்ணியவிதி மற்றும்
புண்ணியநிர்ணயவிதி படலங்கள்)
மற்றும்
இவ்விருபடலங்களின் தமிழாக்கமான

சிவபுண்ணியத்தெளிவு

நிகமஞானதேசிகர் இயற்றியது

अथ वक्ष्ये विशेषेण पुण्यनिर्णयमुत्तमम्।

सर्वलोकहितं पुण्यं सर्वसिद्धिप्रदायकम्॥ १ ॥

காப்பு

கலிவிருத்தம்

பழகிய பதித்துவப் பான்மை எய்தவும்
முழுகிய பசுத்துவ முற்று நீங்கவும்
ஒழுகிய மும்மதத் தொளிகொள் ஞானமார்
அழகிய பிள்ளையார் அடிகள் போற்றுவாம்.

சபாநாதர் துதி

உலகினும் உயிரினும் ஒன்றி நின்றருள்
குலவிய ஒளியுயிர் குறிக்க ஐந்தொழில்
இலகிய மன்றினுள் எழில் நடஞ்செய்வோன்
வலமிகு மலரடி வழுத்து வாமரோ.

சிவகாமியம்மை துதி

ஒற்கமில் இருண்மலத் தொளியின் நீங்கியே
நற்கதி பெறவருள் நயந்து போற்றுவாம்
சிற்கனன் தன்னொடு சிறப்பின் ஓங்கியே
கற்கொளி போன்றுளாள் கமல பாதமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் துதி

விடமணி களனென விளங்கித் தோன்றவே
தடமலர் நீர்கொடு தாழ்ந்து போற்றுவாம்
வடவரைப் பாரதம் மருப்பிற் றீட்டுமா
கடகரி முகத்தவன் கமல பாதமே.

சுப்பிரமணியர் துதி

அந்தமா தியுமிலா ஆண வத்தொடும்
பந்தமா னவைகெடப் பணிந்து போற்றுவாம்
சந்தமார் தடவரைத் தமிழ்க்க டற்கருள்
கந்தவேள் பூங்கழற் கமல பாதமே.

நந்திதேவர் துதி

ஓதுமுப் பொருளையும் உணர்ந்து நாற்பதத்(து)
ஆதியா கமந்தழீஇ அதனைப் பன்னிரு
போதசூத் திரமதாப் புகன்ற நந்திதன்
பாதபங் கயமலர் பணிந்து போற்றுவாம்.

அகத்தியமுனிவர் துதி

சகத்துயி ரிருண்மலத் தனுவின் நீங்கியே
அகத்தினு ளவையெலாம் அடக்கு வாய்மையா
மகத்துவம் எமக்கருள் மலயத் தோங்குசீர்
அகத்தியன் திருவடிக் கன்பு செய்குவாம்.

காரைக்காலம்மையார் துதி

கொம்மைசேர் வரிமுலைக் கூற னார்தமைச்
செம்மைசேர் கயிலையிற் சென்று போற்றியே
இம்மையே சிவகதி எய்து காரைக்கால்
அம்மைதாள் மலர்முடிக் கணிகு வாமரோ.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தசுவாமிகள் துதி

பிறையணி மௌலியன் பேதை யாளோடும்
சிறையணி புனற்றடத் தீரம் மேவியே
நிறையமு தருத்தவுள் நெகிழப் பாடுநான்
மறையவன் மலர்ப்பதம் வணங்கி வாழ்த்துவாம்.

திருநாவுக்கரசுசுவாமிகள் துதி

திரைபொரு கடலிடைச் செறித்துத் தீயமண்
புரையினர் விடுசிலை புணைய தாகவே உரைதரும்
ஐந்தெழுத் துணர்த்து பாடலால்
கரைவரும் அப்பர்தாள் கருது வாமரோ.

சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி

அந்தரம் இழிந்தவெள் ளானை மீதுறீஇ
மந்திர வெள்ளிமா மலையின் ஏகியே
சந்திர சேகரன் சரணம் சேர்தமிழ்ச்
சுந்தரன் அடிமுடி சூட்டு வாமரோ.

மாணிக்கவாசகசுவாமிகள் துதி

பேதவூர் தனுகர ணாதி பின்னிட
நாதவூ ரகன்றுமெய்ஞ் ஞானநாட் டத்தால்
போதவூர் புகுந்துதம் போக மேற்கொளும்
வாதவூ ரடிகளை வணக்கம் செய்குவாம்.

திருத்தொண்டர் துதி

நீக்கியா ரிருண்மலம் நிறைந்த பேரொளி
ஆக்கியே மனோலயத் தகன்ற நோக்கினால்
நோக்கியே பேருயர் நோன்மை பெற்றசீர்ப்
பாக்கியத் தொண்டர்தாள் பணிகு வாமரோ.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்கண்டதேவநாயனார் துதி

நற்றமி ழாற்சிவ ஞான போதநூல்
சொற்றுயிர்க் கியல்பதாம் சுகோத யம்தரக்
கற்றவன் வெண்ணெய்மெய் கண்ட தேசிகன்
கொற்றமார் குரைகழல் குழைந்துபோற்றுவாம்.

அருணந்திதேவநாயனார் துதி

புன்னெறி அகற்றிய போத சூத்திரத்
தின்னெறி விளங்கநூல் இலங்கச் செய்துமேல்
நன்னெறி காட்டரு ணந்தி தேசிகன்
தன்னிரு பங்கய சரணம் போற்றுவாம்.

உமாபதிதேவநாயனார் துதி

சொற்றரு முதல்வழித் தொன்மை நூன்மறை
கற்றொளிர் சிவப்பிர காச நூல்புகல்
கொற்றவன் குடிவரு குரவன் எம்மையாள்
நற்றவன் பதமகம் நாட்டு வாமரோ.

குகைமறைஞானதேசிகன் துதி

மாசிலா கமமெலாம் வரம்பு கண்டுயிர்ப்
பாசிவே ரறத்தமிழ்ப் பனுவல் செய்தவன்
தேசமார் குகைமறை ஞான தேசிகன்
வாசமா மலர்ப்பதம் வணங்கு வாமரோ.

சத்தியஞானதேசிகர் துதி

சித்திசேர் வெண்ணெய்மெய் கண்ட தேசிகன்
பத்திசேர் மரபினைப் பரித்த பண்டிதன்
முத்திசேர் சிவபுர முதல்வன் எம்மையாள்
சத்திய ஞானிதன் சரணம் போற்றுவாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவையடக்கம்

புன்சொலா நரகினைப் புகுத்திக் கேட்பவர்க்
கின்சொலா யினுமஃ திழுக்கற் பாலதாம்
நன்சொலாம் சிவகதி நல்கு மேயெனில்
புன்சொலா யினுமிகப் போற்றும்தன்மைத்தால்.

கண்ணுதல் புகழினைக் கருதி டாவெனில்
பண்ணவர் மொழிகளும் பழியின் பாலவாம்
அண்ணல்தன் புகழ் புகல் அடியனேன்மொழி
தண்ணிய வாயினும் புகழிற் சாருமால்.

நூற் சிறப்பு

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

அழுக்கிலா அநாதி முத்தன்
அகண்டித துரியா தீதன்
இழுக்கில்வே தாக மங்கள்
இயம்பினன் பொதுச்சி றப்பென்(று)
ஒழுக்கமா ருலகத் தோர்க்கும்
ஒங்குசத் திநிபா தத்தின்
வழுக்கிலா தவர்க்கு மென்றே
மதித்தனர் நூல்வல் லோரே.

சீவனைச் சிவத்தி னொன்றாச்
சேர்க்குஞ்சித் தாந்தத் தோர்க்கும்
சீவனைப் பரத்தி னொன்றாச்
சேர்க்கும்வே தாந்தத் தோர்க்கும்
பாவனை இரண்டும் ஒன்றே
பரமஞா னத்தோர்க் கெல்லாம்
மேவிய கரும காண்டம்
விளம்பிடிற் பேத மாமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுருதியின் மிருதி முற்றும் சொற்றிடும்
புராணம் எல்லாம்
கருதுபுண் ணியங்கள் தத்தம் கதிபசுத்
துவமே காட்டும்
பொருதிமி ரகற்றிச் சைவம் புகல்சிவ
புண்ணியந்தான்
வருதியென் றருளாற் சாலோ
காதியை வழங்குமன்றே.

ஆரணம் புகன்ற வாற்றால்
அக்கிநிட்டோம மாதி
சீரணி விரத நாற்சாந் திராயணம்
செய்கின் றோர்கள்
பூரண விமானத் தேறிப் பூமியந்
தரசு வர்க்கத்
தேரணி புனித ராகி இன்பொடும்
போகம் துய்ப்பார்.

ஓசைகொள் அசுவ மேதம் ஒருநூறி
யாகம் செய்தோர்
வாசவன் பதத்திற் சேர்வார் மற்றிவர்
அநந்த கோடி
நேசமார் மகத்தி னாலும் நிறைசிவன்
தொண்டர் தாமே
பேசுசாட் டியத்தாற் சேரும் பெரும்பதம்
அடையார் மன்னோ.

களித்திடு மிவைச ரீர கன்மமென்
றமைந்த வாற்றால்
விளித்துயி ரினைப்பி றப்பில் வீழ்த்திடும்
அதனால் ஆவி
குளித்திடும் மலத்தை நீக்கிக் குரைகழல்
காட்டும் ஈசன்
தெளித்திடு சிவாக மத்திற் செப்பு
புண்ணியங்கள் தாமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதியில் அநாதி சச்சி தாநந்த
அமலன் தானே
ஓதிய விமல ஞானம் உணர்வுயிர்க்
குறாமை நோக்கிச்
சோதிசேர் கருணை மேனி தொடக்கிப்பின்
அருளாற் கூறும்
நீதிசேர் காமி காதி நிறைமொழி
இருபத் தெட்டாம்.

இங்கிவற் றின்பே தங்கள் இருநூற்றே
ழாமவற்றுள்
துங்கமார் நந்திக் கெந்தை சொற்றவா
கமங்கள் தம்மில்
தங்கு சிந்திய விசுவ சாதாக்கியம்
தன்னின் மன்னும்
பொங்குபுண் ணியத்தை யானும் தமிழினாற்
புகல லுற்றேன்.

நூற்பெயர்

உலகினுக் கிதம தாயும் உயிர்க்குறும்
சித்தி யாயும்
பலமுறக் கொடுப்ப தாயும் பகருமுத்
தமம தாயும்
குலவுபுண் ணியத்தை ஈசன் கூறிட
நந்தி கேட்டே
புலமுற இதற்கு நாமம் புண்ணியத்
தெளிவென் றானால்.

கோபுரசிகரம் தரிசிக்கும் பலன்

शिखरं दूरतो दृष्ट्वा नमस्कुर्याच्छिवालयम्।

जन्मान्तरकृतं पापं तत्क्षणाद्गलति ध्रुवम्॥२॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறையணி சிகரம் தூரப் பிறங்கிடத்
தரிசித் தேபின்
அறைகழற் கமல பாதத் தடிகளா
லயத்து ளேகி
முறையுறப் பணிந்தார் முன்னம் முற்றிய
உடலம் தோறும்
சிறையுறப் புரிந்த பாவம் தீர்தலக்
கணத்தில் திண்ணம்.

வழிநடந்துவந்த இளைப்போடும்
வலம்வரும் பலன்

दूराध्वानपथा श्रान्तं प्रादक्षिण्यं शिवालयम् ।

तत्क्लेशं तु शिवोप्याथ[5] भवेत् पापौघनाशनम् ॥ ३ ॥

வழியினில் அதிதூ ரத்தில் வந்திடும்
இளைப்பி னோடும்
விழிநுதல் அமலன் கோயில் மேவியே
வலஞ்செய் வோர்தாம்
மொழியதர்க் கிலேசத் தோடும் முயன்றமுற்
பாவ மெல்லாம்
அழிவுறப் புரிவன் எங்கோன் அருந்தவம்
இதன்மே லுண்டோ.

ஆசாரியர் இருக்கும் மடாலயத்தையும்
அவர் திருமேனியையும் வலம்வரும் பலன்

गुरुदेशालये तत्तु द्विगुणं फलमृच्छति।

तस्माद्द्विगुणमुत्कर्षं गुरुदर्शनतो भवेत्॥ ४ ॥

---

5 இங்கு சரியான சொல் கையெழுத்துப் பிரதிகளில் கிடைக்கவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்னவை குரவன் ஓங்கும் எழில்கொளா
லயத்திற் செய்தோர்
சொன்னமுற் பலத்தி ரட்டி துன்னுவர்
சோதி ஞானம்
மன்னிய குரவன் மேனி மகிழ்வுறத்
தொழுது நின்றோர்
பின்னும்வே ணியனைக் கண்ட பேற்றிரு
குணிதம் சேர்வார்.

ஆசாரியரைப் பணிந்து துதிக்கும் பலன்

नमस्काराच्चु द्विगुणं स्तोत्रेणापि शतं भवेत् ।

பதியைப் பணியும் பலத்திரட்டி பரம குரவற்
பணிவோர்க்கு
வதியு முயிர்க்கு ளுயிராகி வளரு ஞான
வரோதயன்பால்
துதியிற் சதமாம் தேசிகனைத்துதிப்போர்
தமக்குத் தொகும்பலனென்
றதிக மறைகள் அறைதலினால் அவன்றன்
பெருமை அளப்பரிதே.

ஆசாரியருக்குப் பணிவிடை செய்யும் பலன்

आदरेण तु शुश्रूषा मोक्षाय भवति ध्रुवम् ॥५॥

பாச மகற்றும் தேசிகற்குப் பரிவால் என்றும்
பணியதனை
நேச முறவே புரிந்தோர்க்கு நிகழும் பரம
சிவயோகம்
ஆசை பெருக்கும் போகவிதம் அடையக்
கருதின் அவர்குரவன்
வாச மலர்ச்சே வடியிணைகள் மகிழ்ந்து
பாங்கால் வணங்குகவே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவிழாவில் வலம் வருதலுக்கும் ஆசாரியர் பின் வருதலுக்கும் பலன்

अथवा भोगकामी चेत् साङ्गोगोपाङ्गं समाचरेत्।

देवस्य चोत्सवे काले यः कुर्यात्तु प्रदक्षिणम् ॥ ६ ॥

पदे पदेऽश्वमेधस्य फलं तद्गुरावपि ।

அட்ட மூர்த்தி அமலேசன்
அணியார் விழவில் வலம்வருவோர்க்
கிட்ட முறவோ ரடிக்கடிக்கங்
கியற்றும் பரிமே தப்பலனாம்
சிட்டர் பரவும் தேசிகன்பின்
செல்கின் றோர்க்கும் பலமிஃதே
கட்ட மலமும் வினையுடலும்
கழித்துச் சிவத்திற் களிப்பாரே.

துவசாரோகணம் செய்யுங்காலத்தில் அதன்பின் வலம்வரும் பலன்

ध्वजारोहणकाले तु यथा कुर्वन् प्रदक्षिणम् ॥ ७ ॥

इहैव धनवांच्छ्रीमान् पुत्रपौत्रविवृद्धिमान्।

பந்த மான பசுபாசப்
பகைவன் இடபக் கொடியேற்றும்
அந்த வேலை தணிற்சென்றே
அழகார் கொடிப்பின் வலம்வருவோர்
புந்தி களிகூர் தமனியமும்
பொன்னும் மகவும் பௌத்திரரும்
சிந்தை களிப்பக் காசினியிற்
செல்வம் பெருகத் திளைப்பவரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துவசாரோகண நிவேதனத்தின் பலன்

ध्वजारोहणकाले तु वृषभस्य निवेद्यकम् ॥ ८ ॥

तद्भुक्त्वा च त्रिधा वन्ध्या लभेत् पुत्रं न संशयः ।

வடமே ருவினைச் சிலைவளைத்த
வரதன் இடபக் கொடியேற்றில்
படமார் இடப நிவேதனத்தைப்
பரிவால் அருந்தும் பைந்தொடிதான்
திடமே மலடி என்றிடினும்
சிறந்த மகவைப் பெற்றிடுவள்
விடமார் கண்டத் தமலேசன்
விளம்பு நூலின் விதியிதுவே

திருவிழாவில் நாடோறும் வலம்வரும் பலன்

केवलं देवायतने प्रादक्षिण्यप्रवर्तनम् ॥ ९ ॥

सप्तजन्मकृतात् पापात् दिनेनैव तु मुच्यते ।

नित्योत्सवस्य काले यः प्रदक्षिणमथाचरेत् ॥ १० ॥

रुद्रत्वं समवाप्नोति नात्र कार्या विचारणा ।

ஏற்றுக் கொடியோன் ஆலயத்தில்
யாதோர் காலம் வலம்புரிவோர்
மாற்றற் குரியார் எழுபிறப்பின்
வதிந்த பாவம் அத்தினத்தில்
போற்றி நாளும் விழவின்வலம்
புரிவோர் மேலாம் உருத்திரராய்த்
தோற்றித் திகழ்வர் உண்மையெனச்
சொல்லும் சுருதி சிவாகமமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகாங்க நமஸ்காரம் முதலாகிய அஷ்டாங்க நமஸ்காரம்

नमस्कारं यथा कृत्वा तथा लोके सुपूजितः ॥ ११ ॥

एकाङ्गं च द्वयाङ्गं च त्रयाङ्गं पञ्चमाङ्गकम्।

अष्टाङ्गं च क्रमेणैव तत्तत्फलमवाप्नुयात् ॥ १२ ॥

शिरसा तु नमस्कारमेकाङ्गं त्विति कीर्तितम्।

शिरसा दक्षहस्तेन द्वयाङ्गं च भवेदिदम् ॥ १३ ॥

करद्वयेन शिरसा त्रयाङ्गमिति कीर्तितम्।

शिरसा पाणिपादैस्तु पञ्चाङ्गं दण्डवद्भवेत् ॥ १४ ॥

शिरसा चिबुकेनैव श्रवणद्वयजानुके।

करद्वयेन संयुक्तमष्टाङ्गमिति कीर्तितम् ॥ १५ ॥

சிரமே காங்கம் வலக்கரத்தைச்
சிரத்தில் குவித்தல் துவிதாங்கம்
சிரமேல் வாம கரத்தினையும்
சேர்த்தல் திரிவி தாங்கம தாம்
சிரநீள் கரஞ்சா னுக்கள்நிலந்
தீண்டல் பஞ்சாங் கமதாகும்
சிரமோ வாய்கா துகைசானு
செகத்தில் படிதல் அட்டாங்கம்.

நமஸ்காரபலன்

एवं विधैर्नमस्कारैः पञ्चभिर्नन्दिकेश्वर।

सालोक्यं चैव सामीप्यं सारूप्यं सदृशं तथा ॥ १६ ॥

नमस्काराद्यर्चनाद्यैरेतेषां प्राप्तियोग्यता ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறைந்த அங்கம் ஐந்துவிதத் தாலும்
அநாதி அவற்றினின்றே
துறந்த ஞான வானந்த
சோதி பாதம் தொழுதெழுவோர்
சிறந்த உலகின் மேலோர்மெய்ச்
சிறப்புற் றிறைஞ்சத் திகழ்ந்துவளம்
நிறைந்த சாலோ காதிபலன்
நெறியால் நுகர்ந்து நிலவுவரே.

சிவாலயத்தை தினமும் மூன்றுவலம் செய்யும் பலன்

स्थित्वा देवालयस्याग्रे प्रदक्षिणत्रयं स्वयम् ॥ १७ ॥

कृत्वा सामीप्यमायाति नित्यमेव न संशयः ।

பாசப் பகைவன் பசுபதிஎம்
பரமன் உறையும் ஆலயத்தில்
நேசத் துடனே சென்றிறைஞ்சி
நித்தம் மூன்று வலம்புரிந்து
பேசற் கரியோன் திருமுன்னர்ப்
பிறங்க விருந்த பெருந்தவத்தோர்
ஆசற் றிலகு சாமீபம்
அடைவ ரிதுசத் தியமாமால்.

சிவயோகி தங்குமிடத்தின் பலன்

यत्र ज्ञानक्रियायोगी दिनार्धं दिवसं तथा ॥ १८ ॥

दिवसाद्यं दिनं चापि दिनद्वयमथापि वा ।

तत्तीर्थं तत्तपो यज्ञं तन्मन्त्रं च पवित्रकम् ॥ १९ ॥

बुद्धिपूर्वं वसेद्वाऽपि घटिकार्धं समाहितः ।

तत्र यत् क्रियते पापं नाशमायाति निश्चयः ॥ २० ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரவும் இரவோர் பகலபன்முற்
பாகம் ஒருநாள் இருநாளா
தரவு பெருகும் சிவயோகி
தங்கும் தலம்யா தத்தலமே
கரவில் தவமும் தருமமுமங்
கலங்க ளெவையும் ஆகமமும்
விரவு முயிர்க்காம் புனிதமுமம்
மேலோன் பெருமை விளம்பரிதே.

சித்த மலமும் வினையுடலும்
தீதென் றருளால் அநாதிமல
முத்தன் அடிக்கீ ழத்துவித
முத்தி அடைந்த சிவயோகி
புத்தி யுடன்யா தோரிடத்தில்
பொருந்தில் அரைநா ழிகையவணே
பத்தி படச்செய் பாவமெலாம்
பரிந்து கெடுதல் நிச்சயமே.

தீர்த்தத்தின் பலன்

जलं शुद्धमशुद्धं वा शिवधामसमीपगम्।

दिव्यगङ्गेति तां विद्यात् तत्र स्नायाच्चु यो नरः ॥२१॥

सप्तजन्मकृतं पापं क्षणेनैव विनश्यति।

அத்தன் இறைவன் அமலேசன்
அமரா லயத்தின் அருகுறுநீர்
சுத்த மசுத்த மாயினுநற்
சுரர்கள் பாவு கங்கையென்றே
புத்தி புரிந்தங் கத்தடத்தின்
புனலுட் படிவோ ரியாரேனும்
சத்த சனனத் துறுபாவம்
தணந்து சிறந்து தயங்குவரே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசாரியர் திருவடிதீர்த்தத்தின் பலன்

देशिकाङ्घ्रिजतोयेन प्रोक्षयेन्नन्दिकेश्वर ॥ २२ ॥

तस्य पापादिकर्माणि तत्क्षणान्नश्यति ध्रुवम् ।

சித்தும் அசித்தும் சித்தசித்தும்
தெளிந்த யோகம் அகம்பிரம
முத்தி யளிக்கும் தேசிகன்றன்
முளரிச் சரணாக் கிரத்துதித்த
சுத்த தோயம் தனைவாங்கித்
தொழுது சிரமேல் தெளித்தோர்தம்
புத்தி யுறுபா வாதிவினை
போமக் கணத்தில் திண்ணமதால்.

ஆசாரியர் கொடுக்கும் பரிகலத்தின் பலன்

आचार्योच्छिष्टकं यस्तु गुरोरादेशताच्छुतः ॥ २३ ॥

स तु चण्डेशसाम्यत्वमाप्नोत्येव न संशयः ।

महापातकशान्तिस्तु नात्र कार्या विचारणा ॥ २४ ॥

பாச மகற்றும் தேசிகன்தான்
பரிவால் நுகர்ந்து மிகுசேடம்
வீச அன்னோன் நேசமுடன்
விதியி னருந்தும் மேலோர்கள்
ஓசை வடிவாம் சண்டேசன்
ஒப்புற் றுறைவ ரஃதல்லாற்
பேச அரிய பாதகமும்
பிரிப்பர் இவைசத் தியமாமால்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசாரியர் திருவடிகளை பரிசிக்கும் பலன்

सद्गुरोरङ्घ्रिसंस्पर्शात् सर्वपापैर्विमुच्यते।

மானம் ஒழுக்கம் தவம்தானம்
வனப்போர் நான்கு வருணத்துள்
ஈன மின்றி இரண்டாமாச்
சிரமத் திருத்தல் இசைந்துசிவ
ஞான மதின்முப் பொருளுணர்த்தும்
நற்றே சிகன்தாள் பரிசித்தோர்
ஊன மான பாவமெலாம்
ஒழிவா ரெனநூன் மொழிவாரே.

சிவலிங்க தரிசனபலன்

हेमाद्रिस्वर्णदानं तु धेनूनां कोटिदानकम्॥२५॥

कन्याकोटिशतं दानं तत्तुल्यं लिङ्गदर्शनात्।

தங்கம் கனக மேருவரை
தானம் கொடுத்தல் சதகோடி
மங்குல் அளகக் கன்னியரை
வளத்தின் அளித்த லொருகோடி
துங்கம் தருகோ டுடைத்தீம்பாற்
சுரபி வழங்கல் துலங்குசிவ
லிங்கந் தனையே தரிசித்தோர்க்
கெய்தும் பலத்துக் கிணையாமால்.

சிவலிங்கத்தைப் பரிசிக்கும் பலன்

लिङ्गसंस्पर्शनाद्भक्त्या सर्वपापैः प्रमुच्यते॥२६॥

स्पर्शवेदिस्पर्शनाल्लोहः स्वर्णत्वं नयते क्षणात्।

तद्वत् स्पर्शनतो मुक्तो नात्र कार्या विचारणा॥२७॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசற் கன்பாய் அவனிலங்கும்
இலிங்க மதனைப் பரிசித்தோர்
மோசித் திடுவர் பாவமெல்லாம்
மூல மலமும் முடித்தருளால்
பேசற் கரிய ஆனந்தம் பெறுவார்
இறவாப் பிரான்கழற்கீழ்
ஓசைக் குளிகை யுறக்களிம்பற்
றுலோகம் பொன்னா முறைமைபோல்

அருச்சனையின் பலன்

गन्धपुष्पजलोद्भूतं नानापुष्पं च यो ददेत्।

शिवभक्त्या च यत् सोऽपि शिवलोके महीयते॥ २८॥

நிலத்தில் திகழ்ந்த நறுமலரும்
நீருற் பவித்த போதெவையும்
புலத்தின் அழுந்தா அன்பினொடும்
போதானந்தன் கழற்கணிந்தோர்
மலத்தி னநாதி முத்தன்மல
வயிரி யுறைஞ் சிவலோக
தலத்திற் புகுந்து நலத்தகைய
தலைவ ராகி நிலவுவரால்.

இந்தப்புட்பம் அர்ச்சனைக்கு ஆகும் என நினைக்கும் பலன்

तद्देशे दृश्यते पुष्पं देवतोद्दिश्य निश्चयम्।

यत्कृतं शिवं संस्मृत्य मोक्षद्वाराय वै भवेत्॥ २९॥

இறைவ னமலன் தனக்கென்றே
யாதோர் தலமுற் றிலகுமிகு
நறைகொள் மலரை அகமலர
நயந்து மதிக்கில் எவரேனும்
முறையின் அவர்க்கம் மதிப்பதனால்
மூல மலமற் றேகமதா
மறையின் முடிவின் வீட்டின்பம்
வழங்கும் வழியின் பொருட்டாமால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நந்தனவனம் வைக்கும் பலன்

उद्यानं देवदेवस्य यः कुर्याद्भक्तिपूर्वकम्।

इहैव धनवांच्छ्रीमान् सोऽन्ते रुद्रपदं लभेत्॥ ३०॥

தேவ தேவன் தனக்கன்பால்
சிறப்பு மிகுந்த நறுமலர்பூங்
காவை மகிழச் சமைத்தளிக்கும்
கருணை யுடையோர் யாவரவர்
பூவின் மடந்தை கனகமிகப்
பொருந்தி உலகின் அந்தியத்திற்
பாவி னிலங்கு முருத்திரர்தம்
பதம்பெற் றிருப்பர் பணியகன்றே.

பசுவிற்குப் புல்கொடுக்கும் பலன்

प्रातः काले गवार्थं तु मुष्टिमात्रं ददेत्तृणम्।

मुक्तिमाप्नोति दारिद्र्याच्छिवलोके महीयते॥ ३१॥

இரவி எழுமுற் காலத்தின்
எழுந்தோர் பிடிபுற் பறித்தன்பால்
பரவி அரிய சுரபிகட்குப்
பரிந்து கொடுத்த பெருந்தவத்தோர்
விரவும் வறுமை யாவைகளும்
விரவா தொழிந்தே வெண்மதியும்
அரவும் அணியும் மணிமுடியோன்
அமருஞ் சிவலோ கத்தடைவார்.

சிவயோகிக்குப் பிச்சையிடும் பலன்

वेदशास्त्रार्थविप्राणां कोटिदानेन यत्फलम्।

भिक्षामात्रप्रदानेन तत्तुल्यं शिवयोगिने॥ ३२॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலிவிருத்தம்

விச்சை நான்மறை வேதியர் கோடிபேர்க்
கிச்சை யோடன மீபலம் யாவையும்
நிச்ச யம்மொரு நீள்சிவ யோகிகைப்
பிச்சை யிட்ட பெரும்பயன் நல்குமால்

பசுவின்பால் அபிஷேக பலன்

अयुतं यो गवां दद्याच्छोत्रिये वेदपारगे।

गोसंज्ञातीर्थके क्षीरस्नापनेन तु तत्समम्॥ ३३॥

கோவின் பேர்பெறு தீர்த்தங் குறுகியே
ஆவி னம்பதி னாயிரம் பன்மறை
மேவும் வேதியர்க் கீபலம் வீசுமால்
ஆவின் பாலிறைக் காட்டிடு மன்பர்பால்

பஞ்சகௌவிய அபிஷேக பலன்

लिङ्गं तु पञ्चगव्यैस्तु विधिना स्नापयेत्तु यः।

काञ्चनेन विमानेन रुद्रलोके महीयते॥ ३४॥

कपिलायास्तु गव्येन घृतवारियुतेन च।

यथाशक्त्यभिषेकं तु कृतवाञ्छङ्करस्य वै॥ ३५॥

स रुद्रपदमाप्नोति नात्र कार्या विचारणा।

கொன்றை வேணிக் குழகனுக் கன்பினால்
வென்றி ஆவினைந் தாட்டும் வியப்பினோர்
பொன்ற யங்குவி மானம் பொருந்திவான்
ஒன்றி வாழ்வர் உருத்திர லோகமே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துய்ய காபில கௌவியம் சோதிசேர்
செய்ய லிங்கந் திகழ்பாணி வட்டமட்
டுய்யு மாறுள்ள மாத்திரம் ஆட்டினோர்
குய்ய ருத்திர லோக குறுகுவார்.

ஸ்நபன பலன்

विध्युक्तस्नपनं कुर्याद्यो नरो भक्तिसंयुतः ॥ ३६ ॥

नानाभोगांश्च भुञ्जीत शिवलोके महीयते।

விதியி னாலிறைக் காட்டல் விரும்பிநீர்
வதியு நற்றப னம்பல வைத்துளோர்
புதிய போகங்கள் யாவும் பொருந்தியே
அதிக ருத்திர லோக மடைவரால்.

திருமஞ்சன பலன்

नद्यन्तस्थं जलं शीतं गन्धपुष्पविमिश्रितम् ॥ ३७ ॥

सेचनाद्देवदेवस्य तद्रुद्रपदमाप्नुयात्।

கந்த மாமலர் நாற்றம் கமழுறீஇச்
சிந்தும் வெண்டிரை யாற்றினுட் சீதநீர்
பந்த நீக்கும் பசுபதிக் காட்டினோர்
வந்து ருத்திர லோகம் வழங்குவார்.

சிவார்ப்பிதபலன்

पूर्वभक्ष्यं तु यद्द्रव्यं भोज्यं दद्याच्छिवाय वै ॥ ३८ ॥

फलपुष्पादयश्चापि धनधान्यादिवर्धनम्।

வருந்தி யாற்றிய வான்தரு போகங்கள்
அருந்து முன்னர் அமலற் கறிவொடும்
பொருந்த நல்கிலப் போகங்கள் யாவையும்
திருந்தி நாளும் சிறப்புற மல்குமால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

लिङ्गे वा प्रतिमायां वा मण्डले भित्तिचित्रके॥ ३९॥

पटे वा फलकायां वा क्षणिके मानसेऽपि वा।

विधिना पूजयेल्लिङ्गं काले काले च तत्प्रियम्॥ ४०॥

मनसो मण्डलं श्रेष्ठं मण्डलात् क्षणिकं वरम्।

क्षणिकात् फलका श्रेष्ठा फलकायाः पटस्तथा॥ ४१॥

पटादाभासमुत्कृष्टमाभासाद्बिम्बमुत्तमम्।

तद्बिम्बाल्लिङ्गमुत्कृष्टं स्फटिकं बाणजं वरम्॥ ४२॥

மான தமண் டலங்கணிகம் பலகைபடம் பித்தி
வரைந்திடுசித் திரமிரதம் வேரமென வகுத்த
தானமிவை யோரெட்டு மொன்றுக்கொன் றதிகம்
தண்படிகம் வாணலிங்கம் சாற்றுமிவற் றதிகம்
ஞானமய லிங்கத்தி லரனைப்பூ சிப்போர்
நற்றீர்த்தம் தானமக மரும்பலங்க ளெவையும்
ஈனமுறு பலபாவ மெரித்திடும்புண் ணியமும்
எய்திடுவ ரிவர்க்கொழிவாம் பாவவிதம் மொழிவாம்

சிவபூசையின் பலன்

सर्वपापहरं पुण्यं सर्वतीर्थफलं भवेत्।

सर्वदानफलं चैव सर्वयज्ञफलं भवेत्॥ ४३॥

ब्रह्महा भ्रूणहा वापि स्नेहहा गुरुतल्पगः।

बन्धुहा वीरहा वापि मातृहा पितृहापि वा॥ ४४॥

गोघ्नोऽपि वा कृतघ्नो वा पुत्रभ्रातृघ्न एव वा।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मित्रहा वा महापापयुक्तो वा परदारिकः ॥ ४५ ॥

ज्ञानयोगी शिवं पूज्य सर्वपापैः प्रमुच्यते।

செந்தழல்வே தியர்க்கொன்றோர் தேசிகனைப் பிழைத்தோர்
தேனுவினை அறுத்தோர்கள் செய்ந்நன்றி செகுத்தோர்
தந்தைதாய் தனைப்புதல்வன் தனைத்தமையன் தனையும்
தனுவினினின் றுயிரொழித்தோர் தமனியமும் கவர்ந்தோர்
அந்தமின்மித் திரரறவோர் ஆண்மையினிற் சிறந்தோர்
ஆக்கைதடிந் தோர்குரவன் மனையயலார் மனையும்
பந்தமுற அணைந்தோர்மா பாதகத்தோ ரேனும்
பரமனைவந் திக்கிலந்தப் பாவமெலாம் அறுமே.

ஆலயத்தில் சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்கும் பலன்

हविर्दत्वा तु विधिना सकृत् काले शिवालये॥ ४६ ॥

अल्पे महति वा तुल्यं फलमाढ्यदरिद्रयोः।

इहैव धनवांच्छ्रीमान् सोऽन्ते मोक्षमवाप्नुयात्॥ ४७॥

அற்பமகத் துவம்வறியோர் அதிகதன முடையோர்
அளித்தவர்க்குப் பலஞ்சமமா மாதலினால் விதான
கற்புடைய விதியினராய் ஒருபொழுதா லயத்தில்
கண்ணுதல்தன் திருமுன்னர்க் களிப்புடனேத் தினர்தாம்
பொற்புடைய பலபோகம் செல்வங்க ளெவையும்
பொருந்தியிக லோகத்திற் போதகமுற் றிருந்தே
அற்புதமெய் யந்தியத்தி லடைவர்முத்தி யெனவே
அநாதிமுத்தன் மலவயிரி அறைந்தனனா கமத்தே

யதி-பிரமசாரி-கிருகஸ்தன்-வானப்ரஸ்தன்
இவர்களுக்கு கொடுக்கும் தானபலன்

यतीनां ब्रह्मचारिणां गृहस्थानां सुतामपि[6]।

---

[6] गृहस्थभिक्षुणामपि ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ज्ञानयोगक्रियाध्यानाद्दानं दारिद्र्यनाशनम्॥४८॥

पुत्रपौत्रादयश्चापि वर्धन्ते धनधान्यकम्।

எதிபிரம சரிகிருகி எழில்வனத்தி லுறைவோன்
என்னுமிவர் ஞானியோ கக்கிரியா தியானத்
ததிகதவ முடையரிவ ராதலினன் னவர்பால்
அருளினவ ரவர்க்கேற்ற தானமளித் திடில்வான்
கதிருதய வரவுலகில் இருளகலு மாபோல்
கழிந்தகலும் வறுமையெலாம் ஒழிந்திடிலன் னவர்க்கே
புதியதன தானியம்புத் திரபௌத்தி ராதி
புங்கமுறு போகமெலாம் தங்கியுறும் தானே.

சங்கு-வாத்தியம்-சாமரை-வாள்-கண்ணாடி-குடை
வஸ்திரம்-பொன் -தாமிரபாத்திரம் இவற்றின் பலன்

शङ्खचामरवाद्यानि दर्पणच्छत्रवाससाम्॥४९॥

हेमताम्रादिपात्राणां दानाद्दारिद्र्यनाशनम्।

पश्चाद्रुद्रत्वमाप्नोति नात्र कार्या विचारणा॥५०॥

தழங்குசங்கு பல்லியஞ்சா மரைவாள்கண் ணாடி
சத்திரம்வத் திரம்கனகம் தாம்பிரபாத் திரமும்
முழங்குநதி மதியிதழி முடிக்கணிந்த பெருமான்
முன்னருறப் பணிந்தெழுந்து மொழிந்திடுநூன் முறையே
வழங்குவோர் தமைமுன்னாள் வருத்திடுநல் குரவு
மாற்றியக மகிழ்வுறப்பின் மல்குவளம் நுகர்வர்
பழங்கணிருள் ஒளியகன்ற வுயிர்க்குயிராய் நிறைந்த
பரமசிவ னுருத்திரன்றன் பதிபெறலுண் மையதால்.

சிவபெருமானுக்காக மணிகொடுப்போர் அடையும் பலன்

धूपघण्टां महाघण्टां देवाय विनिवेदयेत्।

यशःश्रीख्यात्यदारिद्र्यं सिद्ध्यत्येव न संशयः॥५१॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறு வேணி அமலற்கு மண்டபத்
தேறு மாமணி தூபத் தெறிமணி
கூறி ஈந்தவர் கூறரும் செல்வமும்
வீறு தேசமும் கீர்த்தியும் மேவுவார்

சிவபெருமானுக்கு ஆதனம்-சயனம்-வாகனம்-
சிவிகை கொடுப்போர் அடையும் பலன்.

आसनं शयनं वापि हयं वा शिबिकादिकम्।

यो दद्याद्देवदेवाय तत्सामीप्यमवाप्नुयात्॥ ५२॥

ஆத னம்சய னம்மணி யானமும்
ஏத மில்சிவி கைமுத லின்புற
நாத னுக்குக் கொடுத்த நலத்தினால்
ஓத லுற்றசா மீப முறுவரால்.

நாடகசாலை-திருமதில்-கோபுரம்-மண்டபம் முதலியன
சிவபெருமானுக்காகக் கட்டுவிப்போர் அடையும் பலன்

प्रासादं मण्डपं वापि प्राकारं गोपुरं तु वा।

देवाय कृतवान् सद्यः सारूप्यपदमाप्नुयात्॥ ५३॥

திருவரங்கு திருமதில் கோபுரம்
மருவு மண்டபம் வானவர்க் கன்பொடு
கருவ ரம்பறக் கண்டவர் கண்ணுதல்
உருவம் நன்குற மேவுவர் உண்மையே.

சிவபெருமானுக்குத் திருவாபரணம் தூப தீபங்கள்
கொடுக்கும் பலன்

रजताभरणादीनि दीपगन्धादिदानतः।

कीर्तिमान् पुष्टिमान् लोके सोऽन्ते देवं समाप्नुयात्॥ ५४॥

கலன்க ளாதியும் கற்கர டாதியும்
பொலன்கொள் தீபகந் தாதியும் புங்கவற்
கிலங்க வேயளித் தோர்நில னின்மிசை
நலங்கள் துய்த்துநற் றேவினை நண்ணுவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானுக்குப் பூமி கொடுப்போர் அடையும் பலன்

गोचर्ममात्रकां भूमिं शिवाय विनिवेदयेत्।

सर्वदानफलं तत्तु सर्वपापप्रणाशनम्॥५५॥

வளங்கொ ளோர்பசு வின்னதள் மாத்திரம்
விளங்கு பூமி விமலற்கு நல்கினோர்
உளங்கொள் தீவினை யாவு மொரீஇயவர்
தளங்கொள் தான பலங்களும் தாங்குவார்.

விளைநிலமும் சோலையும் சிவபெருமானுக்குக் கொடுக்கும் பலன்

जलसंयुक्तकेदारं सस्यार्थं दापयेद्बुधः।

शिवाय वृक्षदानेन सर्वभोगप्रवर्धनम्॥५६॥

நீரி னோங்கி நிறைவிளை பூமிவிண்
காரி னோங்கு கவின்பொழில் ஞானமார்
சீரி னோங்கு சிவன்தமக் கீந்திடில்
பாரி னோங்குபல் போகமும் பல்குமால்.

சிவவேள்வி செய்யும் பலன்

यो नरः शिवयज्ञं तु कुरुते विधिपूजनम्।

त्रिसप्तकुलमुद्धृत्य शिवलोके महीयते॥५७॥

ज्ञानयोगेन देवेशं ज्ञात्वा गुरुमुखेन वै।

भक्त्या च लभते देवं पुनर्जन्म न ऋच्छति[7]॥५८॥

---

[7] இதே கருத்தை அப்பய்யதீக்ஷிதர் தம்முடைய சிவதியானபத்ததி என்னும் நூலில் கூறுவதும் நோக்கத்தக்கது: एवं ध्यात्वा क्षणमहो अग्निष्टोमायुतात् फलम् ।

उमासहायं विश्वेशं ध्यात्वा प्राप्नोति मानवः ।।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேற்று நூன்முறை யேசிவ யாகம
தாற்றி னோர்கள் அமலனுக் கன்பினால்
கூற்றின் மூவேழ் குலம்குழித் தீயினின்
றேற்றி வான்சிவ லோகத் திருப்பரால்.

சிவானந்தமடையும் பலன்

ஞான தேசிகன் நவிற்றிய ஞானயோ கதனால்
ஈன மின்றிய பத்தியால் இறையைமுன் னுணர்ந்த
மோன ஞானவா நந்தமா மூதுயி ரடைந்தோர் ஊன
மாமலக் குரம்பையின் மீண்டிவ னுதியார்.

சிவபெருமானுக்காக வாவி-கூபம்-தடாகம் வகுக்கும் பலன்

वापीकूपतटाकाद्यैर्देवमुद्दिश्य यत्नतः।
कुर्वन् बहुधनाढ्यस्तु तदन्ते शिवमाप्नुयात्॥५९॥

வாவி கூப தடாகங்கள் வகுத்துமேல் தனக்கோர்
கோவி லாதபேர்க் குரிசிலைக் குறித்தவை கொடுத்தோர்
தாவில் சீர்பெருந் தனத்தொடும் தரணிமேல் தழைத்தே.
சேவி னோங்கிய தேவினை அடைவரந் தியத்தே

பார்வதியாரை அருச்சிக்கும் பலன்

यः पार्वतीं च विधिना भक्तिपूर्वं समर्चयेत्।
सर्वपापविनिर्मुक्तः शिवसारूप्यमाप्नुयात्॥६०॥

இலைய தத்துவத் திலயியோ டிலயமுற் றிலங்கித்
தொலைவில் பேருயிர்க் கருவியாய்த் துரியமேல் நிறைந்த
தலைவி எம்பெரு மாட்டியைத் தாழ்ந்துநூன் முறையே
நிலையில் நின்றருச் சித்துளோர் நிறைசிவத் துறைவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரு லிங்க சங்கமத்துக் கெய்தும் இடையூறு அகலும் பொருட்டு உயிர்விடுவோர் அடையும் பலன்

शिवादित्रयकार्याय सम्यक् प्राणान् परित्यजेत्।

तस्यैव फलसंपत्तिर्वर्णितुं नैव शक्यते॥ ६१॥

स्वभावश्च वैकृता च कृत्रिमा च त्रिधा भवेत्।

स्वाभाविकी तु या भक्तिरिहामुत्र सुखप्रदा॥ ६२॥

कृत्रिमा वैकृता चेत्तु सा परत्र सुखप्रदा।

குருவி லிங்கசங் கமத்தினைக் குறித்தவற் றிடையூ
றொருவு தற்பொருட் டாற்றம துயிர்விடு முரவோர்
மருவி டும்பலம் எமக்குமே வளம்பட வகுப்பான்
அருமை என்றனன் அனைத்தையு முணர்த்துபே ரறிவோன்.

குருத்த பத்தியும் இருவித நூன்முறை குறிக்கின்
வருத்த மற்றநற் சுபாவமும் கவடுமாய் வழங்கும்
தெரித்த முன்னைய திகபரத் தினிற்சுகம் சேரப்
பொருத்து மற்றது பரத்தினிற் சுகத்தினைப் புணர்க்கும்.

சிவலிங்கமிருக்குமிடமுதல் நூற்றைம்பது முழம் அளவுக்குட்பட்ட பூமியிலிறந்தவர்கள் அடையும் பலன்

लिङ्गाद्धस्तशतं सार्धं शिवक्षेत्रमिति स्मृतम्॥ ६३॥

तच्छिवक्षेत्रसामीप्ये मरणं विद्यते यदा ।

स याति शिवसामीप्यं नात्र कार्या विचारणा॥ ६४॥

துன்று சீர்ச்சிவ லிங்கமுன் றொடுத்துநீள் கரங்கள்
ஒன்று நூற்றைம்ப துறுமுழ முற்றநாற் றிசையும்
என்று மேற்சிவ லோகமே இவற்றுயிர் துறந்தோர்
சென்று சேர்வர்சா மீப்பியம் என்பது திடனே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புறச்சமயத்தார் அடையும் பலன்

अन्येषु बहुशास्त्रेषु स्वर्गमात्रफलं भवेत्।

शिवशास्त्रे विशेषेण भोगमोक्षौ क्रमाल्लभेत्॥ ६५॥

பாட்ட மேபிர பாகரம் பௌத்தம்வே தாந்தம்
நாட்டு சாங்கிய மால்வயி ணவமுதற் பசுநூல்
தீட்டு தன்னகப் பொருளினைத் தெளிந்துளோர்க் கின்பம்
கூட்டு மேயிருஞ் சுவர்க்கத்தின் என்று நூல் கூறும்.

ஆகமத்தின் பலன்

प्राप्तेन जन्मना सिद्धिं सन्मार्गे चिन्त्यरत्नके।

तस्मात् सर्वप्रयत्नेन चिन्त्यसादाख्यमभ्यसेत्॥ ६६॥

गुर्वाज्ञया च कर्तव्यं सर्वदानजपादिकम्।

ஆதி ஐந்தொழில் ஆற்றிடா தாற்றுவோன் அணுவின்
போத காரிய மறைத்தவா ணவத்தினைப் போக்க
ஓது மாகமம் தன்னையுற் றுணர்ந்துளோர் தமக்கே
கோதில் புத்தியும் முத்தியும் கொடுத்திடும் மாதோ.

கற்ற தேசிகன் அருளினாற் சிந்தியா கமத்தைப்
பற்றி னாலுள முயற்சியால் பணிவொடும் பயின்றோர்
பெற்ற தோரிந்தப் பிறப்பினில் பெருமலம் நீங்கிச்
சிற்று யிர்க்குயி ராகிய சிவத்தினொன் றாவர்.

॥ इत्यचिन्त्यविश्वसादाख्ये पुण्यविधिः द्विपञ्चाशः पटलः॥

கிலமான சிவாலயம் மடாலயம் சிவலிங்கம் புட்கரணி முன்போலாகச் செய்விப்பவர்கள் அடையும் பலன்

अतीतानि मठादीनि देवतायतनानि च।

लिङ्गादिपुष्करिण्यादि स्थापितान्यपि केनचित्॥ १॥

पुनःप्रतिष्ठिताश्चैव सहस्रगुणितं फलम्।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

जीर्णोद्धारे शतगुणं पापनाशात् समं भवेत्॥२॥

लिङ्गान्यपि च यावन्ति पूजितान्यपि नित्यशः।

स्थापिता पूजिता भक्त्या यावद्रजो महीतले॥३॥

तावत्संख्यासमं पुण्यं प्रासादमठकल्पने।

மாதவர் மடங்க ளாதி வரதன்மந் திரங்க ளாதி
நாதமா மிலிங்க மாதி நளினபுட் கரணி யாதி
சேதமுற் றிடின்முன்போலச் செய்கின்றோர்க் குறும்ப லந்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரம் குணித மோங்கும்.

மேற் சொன்னவற்றில் பழுதான இடங்களைப் பழுதறச்செய்விப்பவர்கள் அடையும் பலன்

உரைத்திடும் மடங்க ளாதி உறுப்பினிற் சிதையின் நூலில்
தெரித்திடு முறையே நன்றாய்த் தெளிவுறச் செய்கின்றோர்க்கு
வரைத்திடின் முன்னம் செய்தோர் மருவிடும் பலத்தின் மேலாய்
விரித்திடும் பலமும் நூறு மடங்கென இயம்பும் மாதோ.

சிவயோகியின் பெருமை

वस्त्रं वा वृषभं वापि तुरगं वा बृषाह्वयम्॥४॥

तैरङ्कितशरीरो यो नरमेधफलं लभेत्।

कः पुमानतिथित्वेन लब्ध्वा नैष्ठिकमुत्सृजेत्॥५॥

चतुर्वेदार्थविदुषां ब्राह्मणानां महात्मनाम्।

आचार्येण तु भुक्तेन भोजिता कोटिरुच्यते॥६॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முந்நூற் சடங்கு முடியாதோன்
முடித்தோன் வேத முழுதுணர்ந்தோன்
தன்னேர் வன்னி கோத்திரியெச்
சாவான் சத்திர யாகி
இந்நூற் புகழ்வே தாந்தியிவ
ரிசைத்த முறையா யிரமதிகர்
தொன்னூல் வேதச் சிரப்பொருண்முத்
துரிய மகவாக் கியமதனின்.

மதித்த தத்துவ மசியந்நு
வயவாக் கியத்தின் வாய்மையினை
விதித்த விஞ்சை யார்கோடி
மறையோர் மேலாம் பசுபதிமுன்
கதித்த வோசைச் சிவகாமத்தின்
கருதும் பொருள்மூன் றுணர்ந்துயிருட்
பதித்த பரம சிவனருளும்
பார்க்கும் சிவயோ கிக்கிணையோ.

சற்புத்திர மார்க்கத்தார்க்கு அன்னம் அளிப்போர் அடையும் பலன்

साधके पूजिते तत्र लक्षं पुण्यफलं भवेत्।

पुत्रो वाप्ययुतं पुण्यं समयस्ते समग्रहम्॥७॥

शतं माहेश्वरो भोक्ता सघृतं सोपदंशकम्।

ஓது நான்மறை யோரயு தம்பெயர்க்
கீத லால்வரும் புண்ணியம் எய்துமால்
பூத நாதன் பதம்பணி புத்திரர்
ஏத மில்லொரு வர்க்கமு தீதலே.

சமய தீட்சை பெற்றவர்க்கு அன்னம் அளிப்போர் அடையும் பலன்

ஆற்றும் வேதியர் ஆயிரம் பேர்தமக்
கேற்ற மோடன மீபலம் யாவையும்
சாற்று மோர்சம யிக்குத் தகுதியால்
போற்றி வீசிடும் புண்ணியம் நல்குமால்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவநாம கீர்த்தனம் செய்வோர்க்கு அன்னம் அளிப்போ ரடையும் பலன்

நூறு வேதியர்க் கீபலம் நொய்தென
வீறி யோங்கி விளங்குதல் மெய்ம்மையே
ஏறு யர்த்தருள் எம்பெரு மான்புகழ்
கூறும் பத்தருக் கன்னம் கொடுத்தலே.

ஆசாரியருக்கு அன்னம் அளிப்போர் அடையும் பலன்

चारन्तण्डुलीपुष्पं च दीपं वस्त्रफलादिकम्॥८॥

शिवाय गुरवे चैव दद्यात्तत्तत्फलं शृणु।

வேறு

வேத நன்குணர் விப்பிரர் கோடிபேர்க்
காதி நூன்முறை யாலருத் தும்பலம்
ஓது மோர்குர வற்குறு மோதனம்
காத லாலருத் தும்பலம் காட்டுமால்.

சிவயோகிக்கு அன்னமளிப்போர் அடையும் பலன்

மறைவ லோரிலக் கம்பெயர் மாந்தவே
நிறையி னாலருத் தும்பலம் நேருமால்
உறையும் சாதக யோகி ஒருவனுக்
கறையு நூன்முறை அன்னம் அருத்தவே.

சாமரம்- தண்டுலம்- தீபம்- வஸ்திரம்-கனி இவை சிவபெருமானுக்கும் ஆசாரியர்க்கும் கொடுக்கும் பலன்

रोमतण्डुलपुष्पाणि दीपतन्तु फलानि वै॥९॥

यावत्तद्द्रव्यसंख्यानि परिसंख्यानि यावति।

तावद्युगसहस्राणि शिवलोके महीयते॥१०॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போற்று சாமரம் தண்டுலம் பூவொளிக்
காற்று தீபம் கலைகனி யாதிய
ஏத்தி யீசற்கு மின்குர வற்குமே
சாற்றி யீந்தவர் தாமுறு புண்ணியம்.

ஓது ரோமநற் றண்டுல மோர்மலர்
ஆதி யாகிய அவ்வவற் றின்றொகைக்
கேத மில்லுக மாயிர மின்பொடும்
பூத நாதன் புரத்திற் பொலிவரால்..

உத்தியானவனம் வைப்போர் அடையும் பலன்

शिवमुद्दिश्य चोद्यानं यः कुर्याद्भक्तिसंयुतः।

पत्रं पुष्पं फलं यावत् तदुद्यानं भवेत्तदा॥ ११॥

तावत्संख्येन संख्यातं शिवलोकयुतं भवेत्।

உத்தி யான மிறைக்களித் தோரதிற்
பத்தி ரம்மலர் பைங்கனி யின்வரை
ஒத்த சீருகம் ஒன்றி மகிழ்வொடு
நித்த னோங்கும் புரத்தில் நிலவுவார்.

சடைமுடிபரிக்கும் சிவபத்தர் அடையும் பலன்

शिवभक्तो जटी भूयाज्जटां प्रति दिने दिने॥ १२॥

अश्वमेधफलं पुण्यं प्राप्यते च न संशयः।

பத்தர் நூன்முறை வேணி பரித்திடில்
ஒத்த வற்றுறு வேணியொவ் வொன்றிற்கு
மெத்து மச்சுவ மேத பலத்தினைச்
சத்தி யம்மவர் நாடொறும் சார்தலே.

முண்டிதம்-சிகையுடைய சிவபத்தர் அடையும் பலன்

मुण्डी वापि शिखी वापि शिवायेति भवेद्यदि॥ १३।

नरमेधहनं पुण्यं दिनं प्रति दिनं प्रति।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அண்ட வாணனுக் கன்பொடு முண்டிதம்
கொண்ட நீள்சிகை யாயினும் கொண்டுளோர்
பண்ட ருந்நர மேத பலத்தினேர்
எண்டி கழ்ந்த தினந்தொறும் எய்துவார்.

சிவபத்தருக்குச் சிவலிங்கம் கொடுப்போர்
அடையும் பலன்

शिवभक्तस्य पूजायै यो लिङ्गं दापयेद्यदि ॥ १४ ॥

तिलसंख्यानि यावन्ति लिङ्गवेदीप्रमाणके।

तावत्कल्पायुतं दिव्यं शिवलोके महीयते ॥ १५ ॥

ஈச னன்பர்க் கிலிங்க மளிக்கிலத்
தேசு வேதித் திலத்தொகைக் காயிரம்
பேசு திவ்விய கற்பம் பிரானுறை
வாச மார்சிவ லோகம் மருவுவார்.

சிவாலயத்திலும் ஆசாரியர் இருக்குமிடத்திலும்
ஒருநாள் திருவலகிடுவோர் அடையும் பலன்

सूक्ष्मजन्तून् प्रतिहरन् शिवाय गुरवे तथा।

संमार्जनं चैकदिनं चान्द्रायणफलं भवेत् ॥ १६ ॥

அண்ணல் தன்பொருட் டாசிரி யன்பொருட்
டெண்ணி யேஅல கிட்டுழி ஓர்தினம்
கண்ணின் மேவரு செந்துக் கழியினும்
கண்ணு வார்சாந்தி ராயண நற்பலம்.

ஒருபட்சம் திருவலகிடுவோர் அடையும் பலன்

नैरन्तर्येण यः कुर्यात् पक्षं संमार्जनं तथा।

शतकोटियुगं दिव्यं रुद्रलोके महीयते ॥ १७ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிக்க விந்த விதியிடை யின்றியே
பக்க மொன்றல கிட்டவர் பல்வளம்
தொக்க ருத்திர லோகம் தொகுவரால்
தக்க திவ்விய கோடி சதயுகம்.

சிவபெருமானுக்காக நீராஜனம்
ஏந்துவோர் அடையும் பலன்

स्नानादिकालिके प्राप्ते नीराजनसमर्पणात्।

कोट्यादित्यसमो भूत्वा शिवलोके वसेत् सदा ॥ १८ ॥

அண்ண லுக்கபி டேகம தாதியில்
எண்ணின் மிக்கநீ ராஞ்சன மேந்தினோர்
விண்ண ருக்கரோர் கோடியர் மெய்யராய்ப்
பண்ணின் மிக்க பரன்பதி பற்றுவார்.

தயிர் அபிஷேக பலன்

दध्ना लिङ्गं सकृत्स्नाप्य विष्णुलोके महीयते।

வண்டு கிண்டித பூித்தொடை வார்சடை
அண்ட நாயகற் கன்பொடு வெண்டயிர்
தொண்டி னோடும் தொழுதுவந் தாட்டினோர்
விண்டு வின்பதி மேவுவர் மெய்ம்மையே.

பசுவின் நெய் அபிஷேக பலன்

कल्पकोटिसहस्रेषु आर्जितं पापसञ्चयम् ॥ १९ ॥

घृतस्नानादिना सर्वं नाशमायाति तत्क्षणात्।

ஆய கற்பமோ ராயிர கோடியும்
ஒய்வ தின்றி உஞற்றிய பாவங்கள்
தேயு நற்சிவ லிங்கத்திற் சீர்பெறத்
தூய நெய்முத லாட்டிடும் தூயர்க்கே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேன் அபிஷேகம் ஞானாக்கினியிற் பூசை செய்யும் பலன்

लिङ्गस्नानेन मधुना सर्वपापं व्यपोहति ॥ २० ॥

अग्निना पूजितो भूत्वा वह्निलोके महीयते।

தேனு வந்து சிவலிங்கத் தாட்டினோர்
ஊனு வந்துபல் பாவமொ ழிப்பரால்
ஞான வங்கியிற் பூசை நயந்திடின்
மான வங்கி பதத்தினில் வாழ்வரே.

கரும்புரச அபிஷேக பலன்

एवमिक्षुरसेनैव वीरो धरापतिर्भवेत् ॥ २१ ॥

இக்கி னூறும் இரதம் இனிமையால்
செக்கர் மேனிச் சிவலிங்கத் தாட்டினோர்
தக்கன் ஆற்று மகந்தடிந் தெம்மையாள்
மிக்க வீர தரன்பதி மேவுவார்.

எண்ணெய்- இளநீர் அபிஷேக பலன்

अभ्यङ्गैस्तिलतैलेन वायुलोके महीयते।

यो लिङ्गं फलसारेण स्नापयेत् पापनाशनम् ॥ २२ ॥

देहान्ते पितृणां स्थानं गच्छत्येव न संशयः।

சங்க ரற்கெள் தயிலமெய்ச் சாத்திடில்
பொங்கு வாயுவின் பொன்னகர் சேர்குவார்
துங்க நீர்க்கனி யாட்டின் துரிசுபோய்த்
தங்கு வார்பிதிர் தங்கிய தானமே.

விபூதி அபிஷேக பலன்

सितेन भस्मना लिङ्गं स्नापनं शिववत् सदा ॥ २३ ॥

शिवलोकादिलोकेषु पूज्य एव न संशयः।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேத நீற்றை விமலனுக் காட்டினோர்
ஒதும் அச்சிவன் போன்றங் கொழிவின்றி
முதெ யிற்சிவ லோக முதற்பதி
போத முற்றவர் போற்றப் பொலிவரே.

சிவபெருமானுக்கும் ஆசாரியருக்கும் பொன்னும் மணியும் கொடுப்போரடையும் பலன்

शिवाय गुरवे चैव त्रुटिमात्रप्रमाणकम्॥ २४॥

हैममैन्द्रपदं रत्नं ब्रह्मवल्लोकमाप्नुयात्।

நம்ப னுக்கும்நற் றேசிகற் கும்பசும்
செம்பொ னோர்துடி மாத்திரம் செய்தவர்
உம்பர் கோன்பதி ஒன்றுவர் மாமணி
இம்பர் வீசின் அயன்பத மெய்துவார்.

சிவபெருமானுக்குத் தூபமிடுவோரடையும் பலன்

देवदारुं नमेरुं च सज्जश्रीवासकुन्दरम्॥ २५॥

श्रीफलाद्यघृतं मिश्रं धूपाल्लक्ष्मीपतिर्भवेत्।

वित्सहस्रगुणाधिक्यं[8] धूपयेद्गन्धसंयुतः॥ २६॥

अयुतं गुग्गुलं प्रोक्तं तत्साहस्रं घृतान्वितम्।

द्विगुणं महिषाक्षाभं शिवतुल्यफलप्रदम्॥ २७॥

कृष्णागरूद्भवो धूपः सर्वपापविनाशनः।

सुगन्धि चन्दनालेपं सकृत् कृत्वा तु लिङ्गकम्॥ २८॥

वर्षकोटियुतं दिव्यं रुद्रलोके महीयते।

चन्दनागरुतः श्रेष्ठं ततः श्रेष्ठं कमुष्णकम्॥ २९॥

---

[8] இங்கு சரியான சொல் எதுவும் கிடைக்கவில்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ततोऽधिकं कुङ्कुमं स्यादन्योन्यं चाष्टमाधिकम्।
अन्याश्चतुर्गुणं श्रेष्ठं धूपं गुल्गुलुमिश्रितम्॥ ३०॥
तदर्धं पनसादीनां फलानां सरसामपि।
ताम्बूलं तैलकर्पूरविफलासंयुतं भवेत्॥ ३१॥
शिवाय गुरवे चैव दानमत्यन्तमुत्तमम्।
इहैव धनवांच्छ्रीमान् परत्र च परां गतिम्॥ ३२॥

தேவ தாருவும் மேருவும் சீர்மிக
மேவு குந்துரு வும்வில்வ மாதிய
தாவில் நற்கனி நெய்யொடு தங்கிய
தூவ மிட்டவர் அச்சுத னாவரே.

விதியி வற்றினற் கந்தம் விரவிடின்
அதிக மாறா யிரங்குண மாமிவை
பதிய குக்குலு வோடு பொருந்திடில்
வதியு மாறா யிரங்குணம் வாய்க்கவே.

அன்ன வைகிரு தத்துறின் ஆயிரம்
துன்னு மிக்குணத் தின்மயி டாக்கியென்
றுன்னு நற்பொருள் கூடி னுருத்திரன்
தன்னை யொத்த பலன்தரும் தன்மையார்.

காரின் மிக்க பொதியத்திற் காரகில்
சீரின் மிக்கவித் தூபம் செறித்திடில்
பாரின் மிக்குப் பயின்றபல் பாவமும்
வேரி னற்று விளிந்திடல் மெய்ம்மையே.

சிவலிங்கப்பெருமானுக்குப் பச்சைக்கருப்பூரக் கலவைசாத்துவோர் அடையும் பலன்

சுகந்த கந்தம் சுலவிய லேபனம்
உகந்த லிங்கத் தொருதினம் சாத்தினோர்
இகந்து பாவம் இமையவர் கோடியாண்
டகந் தெளிந்தங் கரன்பதி நண்ணுவார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானுக்காகப் பேரி முதலிய வாத்தியங்கள் கொடுப்போரடையும் பலன்

मामृताँहैरिमररव[9] तिमिलापटहादिकम्।

शङ्खतालककांस्यादि काहलं वेणुनन्दनम्॥ ३३॥

शिवाय विनियोगेन शिवलोके विमानके।

शिवतुल्यबलोपेतो वसेत् कल्पायुतं सुखी॥ ३४॥

பொங்கு பேரி பொருமுர சம்மிரு
தங்க மோடு திமில்பட காதியும்
சங்கு தாளம் தனுமிகு காகளம்
விங்கு சீரொலி வேணுவும் வீணையும்.

சொன்ன இன்னவை சோதி நிலாவணி
மன்ன வற்கு வழங்கிய மாதவர்
அன்ன வன்றனை யொத்த யுதந்தரும்
துன்னு கற்பம் அவன்பதி தோய்வரால்.

சிவாலயத்திலும் மடாலயத்திலும் நவமணி மாலையால் பத்திசெய்தவர் அடையும்பலன்

मुक्तादामत्रिशोभाढ्यं प्रासादेऽपि मठेऽपि वा।

यः कुर्यात् सर्वलोकेषु शिववन्मोदते चिरम्॥ ३५॥

நித்தி லம்முதல் நீள்மணி மாலிகை
அத்தன் ஆலயத் தன்பர் மடத்தினும்
பத்தி செய்தவர் பற்பல லோகமும்
அத்தர் போல்நெடுங் காலம் அமர்வரால்.

கீழ்க்கண்ட செய்யுளுக்குரிய ஆகமசுலோகம் தற்சமயம் கிடைத்துள்ள கையெழுத்துப் பிரதிகளில் காணப்படவில்லை.

---

[9] இங்கு சரியான சொல் எதுவும் கிடைக்கவில்லை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமானுக்கு வில்வக் குழம்பு அபிஷேகம் செய்யும் பலன்

மாசில் கூவிள பத்திர மத்தனம்
தேசு லாம்பீட லிங்கம திற்செயின்
ஓசை நான்மறை யோர்க்கயு தம்பசுப்
பேசி ஈந்த பெரும்பயன் பெற்றுளார்.

சிவபெருமான் சந்நிதியில் யாவர் நடனம் செய்யினும் அடையும் பலன்

स्तोत्रं गीतं च देवाय भक्त्या परमया युतः।
तच्छ्रोतारश्च वृक्षाश्च कृमिकीटादयस्तथा॥ ३६॥
शिवसालोक्यमाप्नोति किं पुनः स्तोत्रगेयवान्।
नृत्तं शिवाय यः कश्चित् कुरुते तत्फलं शृणु॥ ३७॥
सूर्याय पूजयेद्यस्तु सेव्यमानोप्सरोगणैः।
नृत्तगीतादिसंयुक्तः शिवलोके महीयते॥ ३८॥

நிருத்தம் எந்தைமுன் யாவர்நி கழ்த்தினும்
விரித்த பானு வயுதம் விரிகதிர்
பொருத்து தேரிற் புலவர் அரம்பையர்
கருத்தின் நாடகம் காண்பர் சிவபுரி

சிவாகமதானம் செய்வோர் அடையும் பலன்.

कामादकामतो वापि भ्रूणहत्यादि पातकम्।
तत्सर्वं शास्त्रदानेन नाशमायाद्यनिश्चयम्॥ ३९॥
महापद्मविमानेन शिवलोके महीयते।

நிறைந்த ஆகம தானம் நிகழ்த்திடில்
அறிந்து மற்றறி யாமையோ டாயினும்
சிறந்த பாலன் முதற்கொலை தீர்ந்துதேர்
உறைந்து நற்சிவ லோகம் புகுவரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ज्ञानयोगक्रियाचर्याः सर्वे भक्तिप्रधानकाः॥४०॥

तस्माद्भक्तिप्रधानं तु श्रृणु त्वं नन्दिकेश्वर।

*मद्भक्तजनवात्सल्यं पूजायां चानुमोदनम्॥४१॥

अभ्यर्चनं स्वयं भक्त्या ममार्थे चाङ्गचेष्टितम्।

मत्कथाश्रवणे भक्तिः स्वरनेत्राङ्गविक्रियाः॥४२॥

ममानुस्मरणं नित्यं यश्च मां चोपजीवति[10]।

भक्तिरष्टविधा ह्येषा यस्मिन् म्लेच्छेऽपि वर्तते॥४३॥

स विप्रेन्द्रो यतिः श्रीमान् वाक्पतिः स च पण्डितः।

न मे प्रियश्चतुर्वेदी मद्भक्तः श्वपचोऽपि यः॥४४॥

तस्यैते यत्नतो ग्राह्यं स च पूज्यो यथा ह्यहम्*।

आयान्तं शिवभक्तं वै दृष्ट्वा दद्याद्विमानकम्॥४५॥

स च मे सर्वदा नन्दिन् युष्मद्दर्शनवत्प्रियः।

சிவனடியார்க்கு ஆசனம் கொடுப்போர் அடையும் பலன்

शिवभक्ताय यो दद्यादासनं श्रद्धयान्वितः॥४६॥

विंशद्वर्षसहस्राणि चन्द्रलोके महीयते।

முண்ட கக்கண் முராரியும் போற்றிடும்
அண்டர் கோனன்பர்க் காசனம் ஈந்துளோர்
எண்டி கழ்ந்த இருபதி னாயிரம்
கொண்ட ஆண்டும் அரிபதம் கூடுவார்.

---

* இக்குறிகளுக்குட்பட்டவை சிவதருமம், முதல் அத்தியாயம், 27 முதல் 30 வது சுலோகங்களாகக் காணப்படுகின்றன. சிவபுண்ணியத்தெளிவு ஆசிரியரால் இவை மொழிபெயர்க்கப்படவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவனடியாரைத் தரிசிப்போரடையும் பலன்

गङ्गास्नानसमं पुण्यं दृष्टमात्रे न संशयः ॥४७॥

जलेन शिवभक्ताय पादप्रक्षालनं भवेत्।

यशोवतीं समाश्रित्य मोदते युगपञ्चकम्॥४८॥

கங்கை வேணியன் தொண்டரைக் காணுறில்
கங்கை யாடும் பலன்தரும் கால்தொழு
தங்கை நீரின் அவர்தாள் விளக்கினோர்
அங்கி சேர்பதி தங்குவர் ஐந்துகம்.

சிவனடியாருக்கு முகவாசம் கொடுப்போரடையும் பலன்

घृतेनाभ्यज्य चोद्वर्त्य विष्णुलोके महीयते।

शिवभक्ताय यो दद्यान्मुखवासं च भक्तितः॥४९॥

वर्षकोटिसहस्राणि कौमारं पुरमाप्नुयात्।

கான மார்முக வாசம் கனிவொடும்
ஊன மில்சிவ பத்தர்க் குதவினோர்
ஆன கோடி யுகமா யிரந்தழீஇ
ஞான வேற்கும ரன்பதி நண்ணுவார்.

சிவனடியாருக்கு ஆசமனம் அருக்கியம்
கொடுப்போர் அடையும் பலன்

सम्यगाचमनं कृत्वा पश्चादर्घ्यप्रदानकम्॥५०॥

शिवभक्ताय यो दद्यात् शिवलोके महीयते।

அன்ப ருக்கா சமன மருக்கியம்
இன்ப ருக்காதி யல்வழி ஈந்துளோர்
துன்ப ருக்கிநி லத்தில் துலங்கியே
பின்ப ருக்கன் பெரும்பதி நண்ணுவார்.

சிவனடியாருக்குத் தீபம் கொடுப்போர் அடையும் பலன்

शिवभक्ताय दीपस्य प्रदानं ज्ञानमुत्तमम्॥५१॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொற்பு ரச்சிவ புண்ணிய மேவிடக்
கர்ப்பு ரச்சுடர்த் தீபம் அளித்துளோர்
தற்ப ரச்சிவ சாமர தந்தரும்
சிற்ப ரச்சிவ ஞானம் தெளிகுவார்.

சிவனடியாருக்கு விசிறிகொடுப்போரடையும் பலன்

संवीज्य तालवृन्तेन शिवभक्तं नरं हि यः।
वायुना पूज्यमानोऽसौ वायुलोकं स गच्छति॥५२॥
युगकोटिसहस्राणि रुद्रलोके महीयते।

கீற்று வெண்மதி யோன்தொண்டர்க் கின்புறச்
சாற்றித் தால விருந்தம் தழீஇயதோர்
காற்றி னாலவர் காயத்தின் வேர்வினை
மாற்று வார்வாயு வின்புரம் மன்னுவார்.

சிவனடியாருக்குக் கோவணம் கொடுப்போரடையும் பலன்

நாற்ற மாமல ரோனெழில் நாரணன்
போற்று சங்கர னன்பர்க்குப் பொங்கிழை
ஆற்று கோவணம் ஈந்தவர் ஆயிரம்
தேற்று கோடி யுகஞ்சிவ லோகரே.

சிவனடியாருக்குப் கம்பளம்கொடுப்போர் அடையும் பலன்

ऊर्णं प्रावरणं दद्यात् शिवभक्ताय शक्तिमान्॥५३॥
निष्करोमवशादेव स्वर्णदानफलं भवेत्।

நீடு நற்சிவ பத்தர்க்கு நேசத்தால்
மூடு கம்பளம் ஈந்திடின் முன்னதின்
ஊடு ரோமமோ ரொன்றினுக் கோர்கழஞ்
சாட கந்தரும் அப்பலம் நேருமால்.

சிவனடியாருக்குப் புலித்தோல் மான்தோல் கொடுப்போர் அடையும் பலன்

तत्तद्व्याघ्रादिचर्माणि दत्वा फलमवाप्नुयात्॥५४॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழுவை யின்உரி வானவ னன்பருக்
குழுவை யின்உரி யாதி உதவினோர்
தழுவு கம்பளத் திற்குமுன் சாற்றிய
விழுமி தாய பலத்தினை மேவுவார்.

சிவனடியாருக்கு அன்னம் ஊட்டுவோர் அடையும் பலன்

शिवभक्ताय यो दद्याद्भोजनं तत्फलं शृणु।

कल्पकोटिसहस्राणि रुद्रलोके महीयते॥५५॥

11 . . . . कल्पकोटिशतानिच।

शिवलोकादिलोकेषु शिववन्मोदते चिरम्॥५६॥

क्रमादाक्रम्य लोकेऽस्मिन् राजा भवति धार्मिकः।

अथवा ज्ञानयोगादीन् लब्ध्वा मोक्षमवाप्नुयात्॥५७॥

கூற்றை வென்ற குழகன் அடியரைப்
போற்றி அன்னம் பொலிவுற ஊட்டினோர்
ஆற்று மோர்கற்பம் ஆயிர கோடிமேல்
வீற்றி ருப்பர் உருத்திரன் மெய்ப்பதி.

மூதெ யிற்சிவ லோகன் முதற்பதி
ஓது காலம் அநேகம் உவப்புறீஇ
ஏத மில்சிவன் போன்றங் கிசைந்தபின்
நீதி மன்னவ ராகி நிலத்தராய்.

சிந்தி மூல திமிரம் இருவினை
பந்தம் வீடென் பதுமூல பாசமும்
எந்தை பாதத் திணங்குவ ரேகமாய்
அந்த மில்குர வன்திரு வாணையால்.

சிவனடியாருக்குப் பிதிர்தினங்களில் அன்னம் கொடுப்போர் அடையும் பலன்

पितृनुद्दिश्य यो भक्तः शिवभक्तांश्च भोजयेत्।

---

11 இவ்விடத்தில் அனைத்துக் கையெழுத்துப் பிரதிகளிலும் சொற்கள் சிதைந்துள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

समस्ताः पितरस्तेऽपि शिवलोके महीयन्ते॥ ५८॥

தென்பு லத்தவர் நாளில் திருவமு
தன்பி னிற்சிவ பத்தர்க் கருத்திடில்
துன்ப கன்று பிதிர்க்கள் சுகந்தழீஇ
இன்பி னிற்சிவ லோகத் திருப்பரே

पाटल्युत्पलगन्धादि शीतलस्त्वे .... रि यः।

शिवभक्तस्य दानेन वारुणं लोकमाप्नुयात्॥ ५९॥

சிவனடியாரை ஸ்நானம்செய்விப்போரடையும் பலன்

முத்தன் வேத முதல்வன் சிவனவன்
பத்தர் பாதம் பணிந்தவர்க் கன்பினால்
சுத்த நானம்செய் வித்திடும் தூயவர்
புத்தி யாற்செய்த பாவங்கள் பொன்றுமே.

शिवभक्ताय यो दद्यात् कमण्डल्वादिकं शुभम्।

वर्षकोटिशतं दिव्यं विष्णुना पूजितो भवेत्॥ ६०॥

சிவனடியாருக்குச் சுக்கு முதலியனகொடுப்போர் அடையும் பலன்

विश्वभेषजवर्गादि शिवभक्ताय दानतः।

कल्पकोटिसहस्राणि भवेत् सूर्येण पूजितः॥ ६१॥

रोगार्तशिवभक्ताय भैषज्यानि प्रयच्छति।

युगकोटिशतं दिव्यं शिवलोके महीयते॥ ६२॥

சொற்ப யன்றரு சுக்குமுற் பத்திய
நற்ப யன்தரு பத்தர்க்கு நல்கினோர்
அற்ப கைக்கதிர் ஆதபன் போற்றவே
கற்ப மாயிரம் கோடியும் காண்பரே.

சிவனடியாருக்கெய்தும் வியாதிக்காக மருந்து கொடுப்போர் அடையும் பலன்

பெருந்த வர்க்குப் பிணிமருந் தாதியால்
வருந்தி மாற்றி மகிழ்ச்சிசெய் தோருகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிரந்த கோடிநூ றெய்தும் நிலையராய்த்
திருந்தி மேற்சிவ லோகம் திளைப்பரே.

निक्षेपरक्षणं कृत्वा शिवभक्ताय यो नरः।
शिवलोकं समाश्रित्य न पुनर्गच्छतीह सः॥६३॥

சிவனடியாருக்கு விபூதிப்பெட்டகம் கொடுப்போரடையும் பலன்

भस्माधारं च भक्ताय यो दद्याद्भस्म संयुतम्।
सर्वतीर्थफलं लब्ध्वा शिवलोके महीयते॥६४॥

நீதி வெண்டிரு நீறு நிறைத்துநற்
பூதி யாலயம் புண்ணியர்க் கீந்துளோர்
சீத தீர்த்தங்கள் செய்பலன் எய்தியே
போத மார்சிவ லோகம் புகுவரே.

योगपट्टं च यो दद्याच्छिवभक्ताय यो नरः।
वस्त्रयुग्मसहस्रस्य दत्तस्य फलमाप्नुयात्॥६५॥

சிவனடியார்க்கு ஆகமம்கொடுப்போர் அடையும் பலன்

शिवज्ञानाभियुक्ताय शिवज्ञानस्य पुस्तकम्।
यो दद्यात् सकलं दत्तं शिववन्मोदते चिरम्॥६६॥

வேறு

ஒளியா ரோசைச் சிவாகமத்தை உண்மைச் சிவஞா னிக்களித்தோர்
தெளிவா மியல்பில் தானவிதஞ் சேர வழங்கும் திறத்தினராய்
விளியா வரன்போல் நெடுங்காலம்விருப்புற் றிருப்போர் படிப்போர்கட்
களியா நிற்போர்க் ககமகிழ அளிக்கும் பலமேல் அறைவாமே.

படிப்போரும் ஆகமம் கொடுப்போரும் பதிபசு பாசத்தின் உண்மையறிவோரும் அடையும் பலன்

शिवशास्त्रस्याध्ययितुं फलं पुस्तकदानतः।
कोटिकोटियुतं पुण्यं प्राप्नोत्येव न संशयः॥६७॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

शिवज्ञानार्थं निर्णेतुं फलं वाचामगोचरम्।

அன்னோர் கோடி கோடிதரும் அதிக மான புண்ணியத்தை
முன்னோ னியலின் மொழிந்தபடி முற்று மடைதல் சத்தியமால்
இன்னோன் மையுறும் சிவஞான இயலி னியன்முப் பொருடெரிந்தே
பின்னோ கையுடன் பெறும்பலன்தான் பேசற் கரிய பெருமையதால்.

சிவனடியார்க்கு உருத்திராட்சம் கொடுப்போர் அடையும் பலன்

रुद्राक्षमालादानेन शिवभक्ताय यो नरः ॥६८॥

स रुद्रपदमाप्नोति रुद्रलोके महीयते।

வேறு

செக்கர் மேனிச் சிவனடி யார்க்கணி
அக்க மாலிகை அன்புடன் நல்கினோர்
நக்க னார்பதம் நண்ணுவர் நண்ணியே
மிக்க ருத்திர லோகம் விரவுவார்.

சிவனடியார்க்குக் குடை கொடுப்போர் அடையும் பலன்

शिवभक्ताय योदद्याच्छत्रदण्डसमन्वितम् ॥६९॥

शतयोजनविस्तीर्णां पृथ्वीं भुङ्क्तेऽसपत्नकः।

துண்ட வெண்பிறை வேணியன் தொண்டர்க்குத்
தண்டி னோடுயர் சத்திரம் ஈந்தவர்
கொண்ட தங்குல மாதொடும் வேந்தராய்
மண்த னிற்சத யோசனை மன்னுவார்.

சிவனடியார்க்குப் பாதுகைகொடுப்போர் அடையும் பலன்

उपानह् शिवभक्ताय दानं कुर्यात्तु यो नरः ॥७०॥

रथादिवाहनं लब्ध्वा शिवलोके महीयते।

நீங்க லாது நிறைசிவ நேசர்பால்
பாங்கி னாலணி பாதுகை ஈந்துளோர்
ஓங்கு தேர்முதல் வாகன மூர்ந்துபோய்த்
தீங்கி லாத சிவபுரம் சேர்வரால்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவஞானதேசிகர் உபதேசக் கிரமம் இல்லாமற் சிவபுண்ணியம் செய்யின் பயனில்லை எனல்

उपदेशं विना यस्माच्छिवधर्मं न चारयेत्॥ ७१॥

उपदेष्टानुमन्ता च कर्मकारव्रताय च।

कृतानुपालनं चैव पञ्च तुल्यफलाः स्मृताः॥ ७२॥

புங்க மாஞ்சிவ புண்ணியம் தேசிகர்
தங்கள் வாக்குப தேசம தன்றியே
இங்கி யற்றின் இரும்பயன் இல்லையாய்
மங்கு மென்னும் வரம்புக லாகமம்.

एतेषामपि सर्वेषां रक्तियुक्तोत्तमोत्तमः।

आलयादीनि सर्वाणि रक्षकेण विहीयते॥ ७३॥

नाशमायाति सर्वं तु तस्माद्रक्षक उत्तमः।

रक्षको हि जगत्कर्ता रक्षको हि जगद्गुरुः॥ ७४॥

रक्षको हि पिता माता रक्षकः सर्वदा सुहृत्।

समयी दासमार्गश्च शिवभक्तिपरायणः॥ ७५॥

एतानि समयस्थस्य पर्यायवचनानि वै।

शिवार्चकः पुत्रमार्गी पुत्रसंस्कारदीक्षितः॥ ७६॥

सहमार्गश्च योगी च साधको योगदीक्षकः।

साधकाभिषिक्त इति तस्य पर्यायवाचकम्॥ ७७॥

ज्ञानविज्ञानदीक्षां वा नानारोप्यभिषिक्तकः।

सन्मार्गीत्येव नामानि देशिकस्यैव तत्त्वतः॥ ७८॥

भक्तो दीक्षाकरश्चापि समयी च विशिष्यते।

समये युक्तसंस्कारं सहसा साधकोत्तमः॥ ७९॥

स एव योगयुक्तश्चेत् सहसा गुणमुत्तमः[12]।

---

[12] सहस्रगुणितोत्तमः ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

स एव च शिरो भूत्वा सहसा च विशिष्यते॥८०॥

உத்தம மத்திம அதமதேசிகர் ஆவார் இவர் எனல்

पञ्चविंशत्सहस्रं तु शिवज्ञानं हि लोहितः[13]।

आचार्यः प्रथमः प्रोक्तः पञ्चाशन्तु सहस्रकी[14]॥८१॥

मध्यमाचार्य इत्युक्तो लक्षाध्यायी तदुत्तमः।

आगमानां च सर्वेषां सारात् साराख्यतन्त्रकम्॥८२॥

तस्माद्ध्यनादस्य सर्वांगकविदां[15] वरः।

ஆகமத்தி லிருபத்தை யாயிரநற் சுலோகம்
அறிந்ததே சிகன்கனிட்ட னைம்பதினா யிரந்தான்
மோகமற வாராய்ந்த தேசிகன்மத் திமனே
முறைமையினா லோரிலக்க முயன்றவனுத் தமனே
ஏகனம லேசனருள் காமிகமுன் னாக
இயம்பியிடு மிருபத்தெட் டாகமத்து மிஃதே
பாகமிரு சாராற்சா ரம்மெனவோ ரியலைப்
படிந்துணர்ந்தோ னியல்களெல்லாம் படித்துணர்பண்டிதனே.

केवलं भक्तिमार्गे च दानं प्रोक्तमिहागमे॥८३॥

समयादिदेशिकान्तं तु वैशिष्ट्यादधिकं फलम्।

दानधर्मादिपूजासु वै वैशिष्ट्यमिहेष्यते॥८४॥

कृपया पाणिना दानं शिवभक्तसमं भवेत्।

॥इत्यचिन्त्यविश्वसादाख्ये पुण्यनिर्णयविधिपटलः॥

---

[13] तु योऽधीतः ??

[14] श्लोकानां तु सहस्रकम् ??

[15] सर्वागम ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எங்கள் இல்லத் திருமண விழாவிற்கு
வருகை தந்து மணமக்களை
வாழ்த்தியருளிய
அன்பு நெஞ்சங்களுக்கு எங்களது
மனமார்ந்த நன்றிகளை
பேரன்புடன் காணிக்கையாக்குகிறோம்

சிவஸ்ரீ ரா. கங்காதரபட்டர்
ஸ்ரீமதி க. கௌரீ
மதுரை.

சிவஸ்ரீ ஷ. உக்ரபாண்டிய பட்டர்
ஸ்ரீமதி உ. மதுரவாணி
திருப்பரங்குன்றம் – மதுரை.

ரவி, சுரண்டை. செல்: 9443125178.